# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## *2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 25 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2008.01.28 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

## உண்ணாட்டரசிறை (திருத்தம்)

***2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*நிதி, திட்டமிடல் அமைச்சர் அவர்களினால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா 35.50** **தபாற் செலவு : 10.00**

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

***வாசகம் 2 :*** *இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனாவது குறித்தசில ஆட்களின் இலாபங்கள் மற்றும் வருமானம் மீதான வருமான வரியிலிருந்து விலக்களிப்பதற்குமாகும்.*

***வாசகம் 3 :*** *இவ்வாகசம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனாவது குறித்தசில சந்தர்ப்பங்களில் நிபுணர் ஒருவரால் ஈட்டப்பட்ட வேதனாதிகள் மற்றும் வருமானம் தொடர்பில் வருமான வரியிலிருந்து விலக்களிப்பதற்குமாகும்.*

***வாசகம் 4 :*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனாவது வதிவற்ற இலங்கைப் பிரசைகளின் குறித்தசில வட்டி மற்றும் இலங்கைக்கு வெளியே செய்யப்பட்ட குறித்தசில முதலீடுகளிலிருந்தெழும் வட்டி என்பன தொடர்பில் வருமான வரியிலிருந்து விலக்களிப்பதற்குமாகும்.*

***வாசகம் 5 :*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனாவது குறித்தசில வேறு பங்கிலாபக் கொடுப்பனவுகள் தொடர்பில் அப்பிரிவின்கீழ் வருமான வரியிலிருந்து வழங்கப்பட்ட விலக்களிப்பை நீடிப்பதற்குமாகும்.*

***வாசகம் 6 :*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனாவது எந்த வீட்டின் நிர்மாணம் 2008, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் அல்லது பின்னர் பூர்த்தி செய்யப்பட்டதோ அந்த வீடொன்றின் சொந்தக்காரருக்கு எழுகின்ற அல்லது திரளுகின்ற வருமானத்தின்மீது தள இடப்பரப்பைப் பொறுத்து வருமான வரியிலிருந்து விலக்களிப்பதற்குமாகும்.*

***வாசகம் 7 :*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனாவது அப்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட விலக்களிப்பை குறித்தசில குறித்துரைக்கப்பட்ட ஆட்களின் இலாபங்களுக்கும் வருமானத்திற்கும் மட்டுப்படுத்துவதற்கும் குறித்தசில ஏனையோர் தொடர்பில் 2008, ஏப்பிறல் 1 ஆம் தேதியின் பின்னர் அத்தகைய விலக்களிப்பை மட்டுப்படுத்துவதற்குமாகும்.*

***வாசகம் 8 :*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனாவது அப்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட விலக்களிப்பின்மீது குறித்தசில நிபந்தனைகளை விதிப்பதற்குமாகும்.*

***வாசகம் 9 :*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனாவது அப்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட விலக்களிப்புப் காலப்பகுதிக்குத் தொடக்கத் தேதியொன்றை விதிப்பதற்குமாகும்.*

***வாசகம் 10 :*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனாவது அப்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட விலக்களிப்பின்மீது குறித்தசில நிபந்தனைகளை விதிப்பதற்குமாகும்.*

***வாசகம் 11 :*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனாவது "புதிய பொறுப்பு முயற்சி" என்ற சொற்றொடரின் வரைவிலக்கணத்தைத் திருத்துவதற்குாகும்.*

***வாசகம் 12 :*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனாவது "மீளமைக்கப்பட்ட பொறுப்பு முயற்சி" என்னும் சொற்றொடரின் வரைவிலக்கணத்தைத் திருத்துவதற்குமாகும்.*

***வாசகம் 13 :*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 21அ ஆம் புதிய பிரிவை உட்புகுத்துகின்றது. இப்புதிய பிரிவு குறித்தசில மாவட்டங்களிலிருந்து மீளமைக்கப்பட்ட பொறுப்பு முயற்சிகளின் இலாபங்களுக்கும் வருமானத்திற்கும் குறித்தவொரு காலப்பகுதியின்போது வருமான வரியிலிருந்து விலக்களிப்பதற்கு ஏற்பாடு செய்கின்றது.*

***வாசகம் 14 :*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனாவது அப்பிரிவின்கீழ் வழங்கப்படும் விலக்களிப்பை மட்டுப்படுத்துவதற்குமாகும்.*

***வாசகம் 15 :*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனாவது அப்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட விலக்களிப்பை குறித்துரைக்கப்பட்ட கருத்திட்டங்களுக்கு மட்டுப்படுத்துவதற்குமாகும்.*

***வாசகம் 16 :*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனாவது அப்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட விலக்களிப்பின்மீது குறித்தசில நிபந்தனைகளை விதிப்பதற்குமாகும்.*

***வாசகம் 17 :*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 24இ மற்றும் 24ஈ என்னும் இரண்டு புதிய பிரிவுகளை உட்புகுத்துகின்றது. இப்புதிய பிரிவுகள் கிழக்கு மாகாணத்திற்குள்ளும் ஏதேனும் பின்தங்கிய பிராந்தியத்திற்குள்ளும் அமைந்துள்ள ஏதேனும் புதிய பொறுப்பு முயற்சியின் இலாபங்களுக்கும் வருமானத்திற்கும் வருமானவரியிலிருந்து விலக்களிப்பிற்கு ஏற்பாடு செய்கின்றது.*

***வாசகம் 18 :*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் இது சட்டத்திலுள்ள தவறொன்றையும் சீராக்குகின்றது.*

***வாசகம் 19 :*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனாவது ''ஊழியர்'' என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணமொன்றை உட்படுத்துவதற்குமாகும்.*

***வாசகம் 20 :*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான வாசகத்தின் சட்டப்பயனாவது –*

*(அ) ஆளொருவரின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தை ஆய்ந்தறிகையில் உள்ளடக்கப்படாதிருப்பதற்கு அனுமதிக்கப்பட்ட விடயங்களை நீடிப்பதற்கும் ; அத்துடன்*

*(ஆ) ஆளொருவரின் மொத்த நியதிச் சட்ட வருமானத்திலிருந்து கழிப்பனவு செய்வதற்கு அனுமதிக்கப்பட்ட விடயங்களை நீடிப்பதற்குமாகும்.*

***வாசகம் 21 :*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனாவது "தகைமை பெறும் கொடுப்பனவுகள்" என்பதன் வரைவிலக்கணத்தைத் திருத்துவதற்கும் அத்துடன் கம்பெனியொன்றைத் தவிர ஆட்களினால் சொய்யப்பட்டதாகக் கருதப்பட்ட தகைமை பெறும் கொடுப்பனவுகள்மீது விதிக்கப்பட்ட' குறித்தசில மட்டுப்பாட்டுகளுக்கு மேலதிகமாகச் சேர்ப்பதற்குமாகும்.*

***வாசகம் 22 :*** *இவ்வாசகம், குறித்தசில அச்சுப்பிழைகளைத் திருத்துவதன்மூலம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.*

***வாசகம் 23 :*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனாவது அப்பிரிவை சட்டத்தின் 16 ஆம் பிரிவுக்கு அமைந்ததாக்குவதற்கு ஏற்பாடு செய்வதற்குமாகும்.*

***வாசகம் 24 :*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவை மாற்றீடு செய்வதுடன் வரிவிலக்களிப்புக் காலப்பகுதி முடிவடைந்ததன் பின்னர் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின்மீது விதிக்கப்படவேண்டிய வருமானவரி வீதங்களுக்கு ஏற்பாடு செய்கின்றது.*

***வாசகம் 25 :*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 53 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனானது கம்பெனியொன்றின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம் அப்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட குறித்தசில பங்கிலாபங்களைக் கொண்டிருக்குமிடத்து செலுத்தப்படற்பாலதான வருமானவரி வீதத்தைக் குறைப்பதற்குமாகும்.*

***வாசகம் 26 :*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 54 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் குறித்தசில அச்சுப்பிழைகளைத் திருத்துகின்றது.*

***வாசகம் 27 :*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 61 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனாவது இலங்கையில் வதிவுள்ள கம்பெனியொன்றால் செலுத்தப்படற்பாலதான வருமான வரியின்மீது விதிக்கப்பட்ட குறித்தசில மட்டுப்பாடுகளை மாற்றுவதற்கும் அத்துடன் "இயைபான பகுதி" என்ற வரைவிலக்கணத்தைத் திருத்துவதற்கும் ஆகும்.*

***வாசகம் 28 :*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 62 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனாவது இலங்கையில் வதிவில்லாத கம்பெனியொன்றால் செலுத்தப்படற்பாலதான வருமானவரியை மாற்றுவதற்குமாகும்.*

***வாசகம் 29 :*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 65 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனாவது எந்தப் பங்குதாரர்களின் மொத்தப் பங்கிலாபங்களை வரிநோக்கங்களுக்காக கழிப்பனவு செய்யமுடியாதோ அந்தப் பங்குதாரர்களைக் குறித்துரைப்பதற்கும் அத்துடன் எந்தக் காலப்பகுதிக்குள் வதிவுள்ள கம்பெனியால் செய்யப்பட்ட கழிப்பனவின் ஏதேனும் மிகை ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பப்படவுள்ளதோ அந்தக் காலப்பகுதியைக் குறித்துரைக்கப்பதற்குமாகும்.*

***வாசகம் 30 :*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 79 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனாவது எந்தக் காலப்பகுதியின் பின்னர் தனியாளொருவர் வதிவற்ற ஒருவராகக் கருதப்படுதலாகாதோ அந்தக் காலப்பகுதியைக் குறித்துரைப்பதற்குமாகும்.*

***வாசகம் 31 :*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 95 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனாவது கூட்டிணைப்பு தனிசுப் பிணைப்பொறுப்பின் மீதான வட்டியிலிருந்து வரியைக் கழிப்பனவு செய்வதற்கான வீதத்தை நிர்ணயிப்பதற்குமாகும்.*

***வாசகம் 32 :*** *இவ்வாசகம், அச்சுப் பிழையொன்றைத் திருத்தும் நோக்கத்துடன் முதன்மைச் சட்டவாக்கத்தின் 102 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.*

***வாசகம் 33 :*** *இவ்வாசகம், அப்பிரிவிலிருந்த கருத்துமயக்கம் ஒன்றைத் தெளிவுபடுத்தும் நோக்கத்துடன் முதன்மைச் சட்டவாக்கத்தின் 104 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.*

***வாசகம் 34 :*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 107 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனாவது ஆணையாளர் தலைமையதிபதியால் குறித்துரைக்கப்பட்டவாறு அப்பிரிவின்கீழ் கூற்றுக்களையும் அட்டவணைகளையும் சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்தப்பட்ட கம்பெனிகள்மீது பணமட்டுப்பாடொன்றை விதிப்பதற்குமாகும்.*

***வாசகம் 35 :*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 113 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனாவது இலங்கையில் வதிவுள்ள கம்பெனியொன்றினால் எந்தத் தேதியளவில் முழு வரியும் செலுத்தப்படற்பாலதாகின்றதோ அந்தத் தேதியை மாற்றுவதற்குமாகும்.*

***வாசகம் 36 :*** *இவ்வாசகம், "தொழில்தருநர்" என்ற பதத்தின் வரைவிலக்கணத்தைத் திருத்துவதன் மூலம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 131 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.*

***வாசகம் 37 :*** *இவ்வாசகம், அத்தியாயம்* XI *ஐ மாற்றீடு செய்கின்றது.*

***வாசகம் 38 :*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 132 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்ட இப்பிரிவின் சட்டப்பயனாவது அப்பிரிவின் ஏற்புடைமைக்கு காலவரையறையொன்றை விதிப்பதற்குமாகும்.*

***வாசகம் 39 :*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 132அ என்னும் பிரிவைத் திருத்துகின்றது. அப்புதிய பிரிவு அரசாங்க நிறுவனங்களின் ஊழியர்களால் அவர்களது வேதனாதிகளின்மீது செலுத்தப்படற்பாலதான வருமானவரியிலிருந்து குறித்தசில கழிப்பனவுகளைச் செய்வதற்கு ஏற்பாடு செய்கின்றது.*

***வாசகம் 40 :*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 133 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனாவது குறித்தசில ஆட்களுக்குச் செலுத்தப்படற்பாலதான வட்டியிலிருந்து வருமானவரியின் கழிப்பனவை தடைசெய்வதற்குமாகும்.*

***வாசகம் 41 :*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 152 ஆம் பிரிவை நீக்கம் செய்கின்றது.*

***வாசகம் 42 :*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 153 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனாவது குறிப்பிட்டவொரு தேதியின் பின்னர் செலுத்தப்படற்பாலதான குறித்துரைக்கப்பட்ட கட்டணங்கள் தொடர்பில் வருமானவரிக் கழிப்பனவு ஏற்புடைத்தாகமாட்டாது எனப் பணிப்பதற்கு ஆணையாளர் தலைமையதிபதியை அனுமதிப்பதற்குமாகும்.*

***வாசகம் 43 :*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 155 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் அது 42 ஆம் வாசகத்தால் செய்யப்பட்ட திருத்தங்களின் விளைவாந்தன்மையதுமாகும்.*

***வாசகம் 44 :*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 156 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனாவது 155 ஆம் பிரிவின்கீழ் வருமானவரிக் கழிப்பனவுக்கு ஆளான எவரேனும் ஆள் அல்லது ஏதேனும் பங்காண்மை ஆணையாளர் தலைமையதிபதியிடமிருந்து பதிவிலக்கமொன்றைப் பெற்றுக்கொள்ளும் கடமையொன்றை அத்தகைய ஆளின்மீது அல்லது பங்குடைமையின்மீது சுமத்துவதற்குமாகும்.*

***வாசகம் 45 :*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 160 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் அது 42 ஆம் வாசகத்தால் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந்தன்மையதாகும்.*

***வாசகம் 46 :*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தில் புதிய அத்தியாயம் XXஅ என்பதை உட்புகுத்துகின்றது. இப்புதிய பிரிவு தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபையால் ஏலத்தின்மூலம் இரத்தினக்கல் விற்பனையின்மீது வருமான வரியின் கழிப்பனவு ஏற்பாடு செய்கின்றது.*

***வாசகம் 47 :*** *இவ்வாசகம், சேமலாப நிதிய உதவுதொகை செலுத்துநர் ஒருவருக்கு அந்த உதவுதொகையின் கொடுப்பனவிலிருந்து பிடித்துவைக்கப்படக்கூடிய பணத்தொகையைக் குறைப்பதன் மூலம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 162 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.*

***வாசகம் 48 :*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 163 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனாவது வருமானவரியாக எவரேனும் ஆளினால் செலுத்தப்பட்டிருக்கவேண்டிய தொகையை வரிமதிப்பீட்டாளர் ஒருவர் எந்தத் தேதியின் பின்னர் வரிமதிப்பீடு செய்யலாமோ அந்தத் தேதியை மாற்றுவதற்குமாகும்.*

***வாசகம் 49 :*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 164 ஆம் பிரிவை, அப்பிரிவின்கீழான அறிவித்தல் ஒவ்வொரு பங்காண்மைக்கும் சேர்ப்பிக்கப்படவேண்டும் எனத் தேவைப்படுத்துவதன் மூலம் திருத்துகின்றது.*

***வாசகம் 50 :*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 208 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனாவது எந்தச் செயற்பாடு வரிமதிப்பீட்டாளர் ஒருவரால் ஆணையாளரிடமிருந்து அல்லது பிரதி ஆணையாளரிடமிருந்து எழுத்திலான அங்கீகாரம் பெறப்படவேண்டும் எனத் தேவைப்படுத்தப்படுகின்றதோ அந்தச் செயற்பாடுகளை மட்டுப்படுத்துவதற்குமாகும்.*

***வாசகம் 51 :*** *இவ்வாசகம், "ஆணையாளர் தலைமையதிபதியால் அங்கீகரிக்கப்பட்ட" என்னும் சொற்றொடரின் வரைவிலக்கணத்தை மாற்றுவதன் மூலம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 217 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.*

***வாசகம் 52 :*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்திற்கான மூன்றாம் அட்டவணையை அவ்வட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளின் ஆளடையாளத்தைத் தெளிவுபடுத்துவதன் மூலம் திருத்துகின்றது.*

***வாசகம் 53 :*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்திற்கான ஐந்தாம் அட்டவணையின் 15 ஆம் விடயத்தைத் திருத்துவதன்மூலம் அவ்வட்டவணையைத் திருத்துகின்றது.*

ச.வ.ஓ. 1/2008

## 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம் 2008 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (xvii) என்னும் உட்பந்தியில் "அச்சங்கத்துக்கு எழுகின்ற இலாபங்களாகவும் வருமானமாகவும்" என்னும் சொற்களுக்குப் பிலாக, "2008 மாச்சு 31 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடைகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு அல்லது 2013 ஏப்பிறல் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு அச்சங்கத்திற்கு எழுகின்ற இலாபங்களாகவும் வருமானமாகவும்'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(2) அப்பிரிவின் (எ) என்னும் பந்தியில் -

(அ) அப்பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில், "கலாசார நிதியத்தின்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கலாசார நிதியத்தின்;" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(ஆ) "இலாபங்களும் வருமானமும்;" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இலாபங்களும் வருமானமும்;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(3) அப்பிரிவின் (எ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை சேர்ப்பதன்மூலமும் :-

"(ஏ) ஏப்பிறல் 1 ஆம் திகதியன்று தொடங்கும் ஐந்து ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக் குட்பட்ட ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண்டிற்கும் 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க ; கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்ட ஏதேனும் பதிவுசெய்யப்பட்ட சங்கத்தின் இலாபங்களும் வருமானமும் ; அத்துடன் ;

(ஐ) 2008 ஆம் ஆண்டின்    ஆம் இலக்க, அபி வெனுவென் அபி நிதியச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட அபி வெனுவென் அபி நிதியத்தின் இலாபங்களும் வருமானமும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**3.** 2007 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்ற :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் –

(அ) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "பதவியை வகிக்கின்ற எவரேனும் தனியாளுக்குத்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பதவியை வகிக்கின்ற எவரேனும் தனியாளுக்கு 2008, மாச்சு 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடைகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலமும் ;

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின் "இலங்கையில் எழுகின்ற வேதனாதிகளும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இலங்கை

*யில் 2008, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் எழுகின்ற வேதனாதிகளும்,” என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;*

(இ) *அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன்மூலமும் :-*

“(ஈஈ) *நிபுணர் ஒருவரும் இலங்கை, பிரசையொருவராக அல்லாதவரும் இலங்கை அரசாங்கத்துடன் அத்தகைய வருமானத்தையும் வருமானவரியிலிருந்து விலக்களிப்புக்கு ஏற்பாடுசெய்யும் உடன்படிக்கையொன்றைச் செய்துள்ள ஏதேனும் பொறுப்புமுயற்சியால், 2008 ஆம் ஆண்டின்  ஆம் இலக்க, செயல் நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்ட ஏதேனும் செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டத்தில் இலங்கையில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள எவரேனும் தனியாளின் இலங்கையில் எழுகின்ற வேதனாதிகளும் இலங்கையில் எழாத ஏதேனும் வருமானமும்.*

*இப்பந்தியின் நோக்கத்திற்கு “நிபுணர்” என்பது எந்த நிபுணத்துவத்துறையில் இலங்கைப் பிரசைகளிடையே போதியளவு நிபுணத்துவம் கிடைக்கப்பெறவில்லையோ அந்த நிபுணத்துவத்துறை ஒன்றாக இருப்பதாக ஆணையாளர் தலைமையதிபதியால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபுணத்துவத்துறையில் நிபுணத்துவம் கொண்ட தனியாள் ஒருவர் என்று பொருள்படும்;”;*

(ஈ) *அவ்வுட்பிரிவின் (ஏ) என்னும் பந்தியில் “ஆளின் மனைவி” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “ஆளின் வாழ்க்கைத்துணை” என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;*

(உ) “அத்தகைய தொழில்தருநரின் எல்லா ஊழியர்களுக்கும்” என்பதிலிருந்து தொடங்கி “என்று பொருள்படும் ; அத்துடன்” என்பது வரையிலான சொற்களுக்குப் பதிலாக, “நியாயமானதென ஆணையாளர் தலைமை யதிபதி அபிப்பிராயப்படும் ஒரு திட்டத்திற் கிணங்க அத்தகைய ஊழியருக்கு அல்லது அத்தகைய ஊழியரின் எவரேனும் நியமந்த ருக்கு ஏதேனும் கம்பெனியில் ஏதேனும் பங்கின் அல்லது ஏதேனும் பங்கைக் கொள்வனவு செய்யும் ஏதேனும் விருப்புத்தெரிவின் விடயத் திற்கேற்ப ஒதுக்கீட்டிலிருந்து அல்லது கொடை யிலிருந்து திரளும் ஏதேனும் நன்மையின் பெறுமதி;” என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் “வருமானவரி யிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.” என்னும் சொற்களுக்குப் பதிலாக “2008 ஏப்பிறல் 1 ஆம் திகதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப் பீட்டாண்டு தொடர்பில் வருமானவரியிலிருந்து விலக் களிக்கப்படுதல் வேண்டும்.” என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**4.** 2007 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப் பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :-

(1) உட்பிரிவின் (ஏ) என்னும் பந்தியில், “1997 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, பிராந்திய அபிவிருத்தி வங்கித்தொழிற் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் வங்கியில் தாபிக்கப்பட்ட மக்கள் வங்கியில்” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “1997 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, பிராந்திய அபிவிருத்தி வங்கித்தொழிற் சட்டத்தின்கீழ்த் தாபிக்கப்பட்ட ஏதேனும் வங்கியில் அல்லது 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கூட்டுறவு சங்கங்கள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் சங்கத்தில்” என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(2) அப்பிரிவின் (ஓ) என்னும் பந்தியில் "திரளும் வட்டி" என்னும் சொற்களுக்குப் பதிலாக "திரளும் வட்டி;" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(3) அப்பிரிவின் (ஓ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளைச் சேர்ப்பதன்மூலமும் :-

"(ஔ) வெளிநாட்டு நாணயத்தில் மதிப்பிடப்பட்டு இலங்கை அரசாங்கத்தினால் அல்லது அதன் சார்பில் வழங்கப்பட்ட ஏதேனும் தாய்நாட்டு அபிவிருத்தி முறியின் கொள்வனவிலிருந்து இலங்கையின் எவரேனும் வதிவற்ற பிரசைக்கு எழுகின்ற அல்லது திரளுகின்ற வட்டி ; அல்லது தள்ளுபடி அத்துடன்";

(க) இலங்கைக்கு வெளியே செய்யப்பட்ட ஏதேனும் முதலீட்டிலிருந்து 2003 ஏப்பிறல் 1 ஆம் தேதி யன்று அல்லது அதன் பின்னர் இலங்கையில் வதிவுள்ள எவரேனும் ஆளுக்குத் திரளுகின்ற அல்லது எழுகின்ற வட்டி, அத்தகைய வட்டி ஒரு வங்கியின் ஊடாக இலங்கைக்கு அனுப்பப் படுமிடத்து.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**5**. 2007 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவின் (ஜ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :-

"(எ) இலங்கையில் வதிவுள்ள எவரேனும் பங்குதாரருக்கு இலங்கையில் கம்பெனியொன்றினால் 2008, ஏப்பிறல் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் செலுத்தப்பட்ட ஏதேனும் பங்கிலாபம், அத்தகைய பங்கிலாபம் இலங்கையிலுள்ள ஒரு வங்கியின் ஊடாக இலங்கைக்கு அனுப்பப்படுமிடத்து."

முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்துவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"(2) வருமானவரியிலிருந்து -

(அ) நிர்மாணம் 2008, ஏப்பிறல் 1 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்திசெய்யப்பட்ட ஏதேனும் வீட்டிலிருந்து அத்தகைய நிர்மாணம் பூர்த்திசெய்யப்பட்ட வரிமதிப்பீட்டாண்டிற்கும் அந்த வரிமதிப்பீட்டாண்டை உடனடுத்துவரும் நான்கு வரிமதிப்பீட்டாண்டுகளுக்கும் அத்தகைய வீட்டின் சொந்தக்காரருக்குத் திரளும் வருமானம், அத்தகைய வீடு வதிவிட நோக்கங்களுக்கு மாத்திரம் பயன்படுத்தப்படுமாயின் விலக்களிக்கப்படுதல் வேண்டும் :

வீட்டின் தளப்பரப்பளவு ஆயிரத்து ஐந்நூறு ஆயின் சதுர அடியாக அல்லது அதனிலும் குறைவாக இருக்குமிடத்து, சொந்தக்காரருக்குத் திரளும் வருமானம் அந்த வீட்டின் நிர்மாணம் பூர்த்திசெய்யப்பட்ட ஆண்டிற்கும் அத்துடன் அந்த வரிமதிப்பீட்டாண்டை உடனடுத்துவரும் ஆறு வரிமதிப்பீட்டாண்டுகளுக்கும் வருமானவரிக் கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) ஐந்நூறு சதுர அடி அல்லது அதற்குக் குறைவான தளப் பரப்பளவையுடையதும், நிர்மாணம் 2008, ஏப்பிறல் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் பூர்த்திசெய்யப்பட்டதுமான வீடொன்றின் சொந்தக்காரருக்கு அத்தகைய வீட்டிலிருந்து திரளும் வருமானம் நிர்மாணம் பூர்த்திசெய்யப்பட்ட வரிமதிப்பீட்டாண்டிற்கும் அத்துடன் அந்த வரிமதிப்பீட்டாண்டை உடனடுத்துவரும் நான்கு ஆண்டுகளுக்கும், அத்தகைய வீடு வதிவிட நோக்கங்களுக்கு மாத்திரம் பயன்படுத்தப்படுமாயின் விலக்களிக்கப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**7.** 2007 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :-

(1) உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் அவரால் அளிக்கப்பட்ட சேவைகள் தொடர்பில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "2008 ஏப்பிறல் 1 ஆம் திகதிக்கு முன்னரான ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் அவரால் அளிக்கப்பட்ட சேவைகள் தொடர்பில்," என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலமும் ;

(2) உட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் "வெளிநாட்டு நாணயத்தில் ஈட்டப்பட்ட இலாபங்களும் வருமானமும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "2008 மாச்சு 31 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடைகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் வெளிநாட்டு நாணயத்தில் ஈட்டப்பட்ட இலாபங்களும் வருமானமும்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

(3) உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் "வெளிநாட்டு நாணயத்தில் ஈட்டப்பட்ட இலாபங்களும் வருமானமும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "2008 மாச்சு 31 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடைகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் வெளிநாட்டு நாணயத்தில் ஈட்டப்பட்ட இலாபங்களும் வருமானமும்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

(4) அப்பிரிவின் (ஈஈ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(ஈஈஈ) இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே இலங்கையின் தேசிய நலனுக்கானதென ஆணையாளர் தலைமையதிபதியால் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலினால்

ஆணையாளர் தலைமையதிபதியால் குறித்துரைக்கப்பட்டவாறான ஏதேனும் உயர் தொழிலை அல்லது வாழ்க்கைத்தொழிலைக் கொண்டுநடாத்தும் நெறிமுறையில் ஆற்றப்படும் சேவைகளாக இலங்கைக்கு வெளியேயுள்ள எவரேனும் ஆளுக்கு அல்லது பங்காண்மைக்கு ஆற்றப்பட்ட சேவைகளிலிருந்து இலங்கையிலுள்ள ஏதேனும் வதிவுள்ள கம்பெனியால், அல்லது வதிவுள்ள எவரேனும் தனியாளினால் அல்லது ஏதேனும் பங்காண்மையால் வெளிநாட்டு நாணயத்தில் ஈட்டப்பட்ட இலாபங்களும் வருமானமும் (நியாயமான செலவுகளாக கருதப்பட்டவாறு, அத்தகைய தொகையை ஏதேனும் இருப்பின், கழித்து) வங்கியொன்றின் ஊடாக இலங்கைக்கு அனுப்பப்படுமாயின் அத்தகைய இலாபங்களும் வருமானமும்;";

(5) அப்பிரிவின் (ஐ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன்மூலமும் :

"(ஐஐ) மூன்றாம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக்குள் இலங்கைக்குள் கொண்டு வரப்பட்டு வெட்டிப் பட்டந்தீட்டப்பட்ட பின்னர் ஏற்றுமதி செய்யப்படும் இரத்தினக் கற்களை வெட்டுவதிலும் பட்டந்தீட்டுவதிலுமிருந்து எழுகின்ற இலாபங்களும் வருமானமும்;";

(6) அப்பிரிவின் (ர) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(ரர) வழங்கப்பட்ட ஏதேனும் கடன் தொடர்பில் இலங்கையிலுள்ள ஏதேனும் வங்கிக்கு செலுத்தற்பாலதான வட்டிக்கு சமமான ஒரு தொகை அத்தகைய கடனின் முழுத் தொகையும் 24இ என்னும் பிரிவின் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் புதிய பொறுப்பு முயற்சியில் முதலீடு செய்யப்பட்டுள்ளவிடத்து ;";

(7) அப்பிரிவின் (வ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை இடுவதன் மூலமும் :-

"(வவ) இலங்கைப் பிரசையொருவர் அல்லாதவரும் ஏதேனும் பொறுப்பு முயற்சியில் இலங்கையில் தொழிலுக்கமர்த்தப்பட்ட வருமான தனியாள் ஒருவரின் 2008 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று தொடங்குவதும் அத்தகைய தொழில் இல்லாதொழியும் தேதியன்று அல்லது அத்தகைய பொறுப்பு முயற்சி விலக்களிக்கப் பட்ட பொறுப்பு முயற்சியொன்றாக இல்லா தொழியும் தேதியன்று முடிவடைவதுமான காலப்பகுதியின்போது இலங்கைக்கு வெளியி லிருந்து எழுகின்ற அல்லது பெறப்படுகின்ற இலாபங்களும் வருமானமுமாயிருக்கின்ற இலாபங்களும் வருமானமும் ;

(வவவ) நகர அபிவிருத்தி அதிகாரசபையால் அல்லது தேசிய வீடமைப்பு அதிகாரசபையால் அங்கீ கரிக்கப்பட்ட செயற்திட்டம் ஒன்றின்கீழ் குறைந்த வருமானமுள்ள குடும்பங்களுக்கு ஒவ்வொன்றினதும் தளப்பரப்பளவு ஐந்நூறு சதுர அடியை விஞ்சாத வீடுகளான வீடுக ளின் நிர்மாணத்திற்கும் விற்பனைக்குமான ஏதேனும் பொறுப்பு முயற்சியின் 3 ஆம் பிரி வின் (அ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக் குட்பட்ட இலாபங்களும் வருமானமும், அத்த கைய ஏதேனும் வீட்டின் விற்பனை 2013, ஏப்பிறலில் 1 ஆம் தேதிக்கு முன்னர் இடம் பெறுமாயின்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**8.** 2007 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப் பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "பொறுப்பு முயற்சி இலாப மீட்டத் தொடங்கிய தேதியிலிருந்து" என்பதிலிருந்து அவ்வுட்பிரி வின் இறுதிவரையிலான சொற்களுக்கும் பதிலாகப் பின்வரும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :-

"அந்த வரிமதிப்பீட்டாண்டில் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல், வாங்கல்களிலிருந்து பொறுப்பு முயற்சி இலாபமீட்ட தொடங்கிய தேதியிலிருந்து அல்லது பொறுப்பு முயற்சி வாணிகத் தொழிற்பாடுகளை இரண்டு ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதியொன்றைப் பொறுப்பு முயற்சி பூர்த்திசெய்யும் வரிமதிப்பீட்டாண்டை உடனடுத்துவருகின்ற வரிமதிப்பீட்டாண்டின் தொடக்கத்திலிருந்து, இவற்றுள் எது முந்தியதோ அப்போதிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும் :

ஆயின், எந்தக்காலப்பகுதிக்கு இலாபங்களும் வருமானமும் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுகின்றதோ அந்தக்காலப்பகுதி 2008, மாச்சு 31 ஆம் தேதியின் பின்னர் தொடங்குமிடத்து அத்தகைய இலாபங்களும் வருமானமும் விலக்களிக்கப்படும் காலப்பகுதியானது மூன்றாண்டுகளாதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**9**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "பன்னிரண்டாண்டுகளுக்கு மேற்படாததுமான காலப்பகுதி ஒன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2009, மாச்சு 31 ஆம் தேதிக்குப் பிந்தாமலிருந்து தொடங்கும் பன்னிரண்டாண்டுகளுக்கு மேற்படாததுமான காலப்பகுதி ஒன்றுக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**10**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "எந்த வரிமதிப்பீட்டாண்டில் இலாபங்களை ஈட்டத் தொடங்குகின்றதோ" என்பதிலருந்து அவ்வுட்பிரிவின் முடிவு வரையிலான சொற்களுக்குப் பதிலாகப் பின்வரும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலம் :-

"அந்த வரிமதிப்பீட்டாண்டில் மேற்கொள்ளப்படும் கொடுக்கல், வாங்கல்களிலிருந்து எந்த வரிமதிப்பீட்டாண்டில் இலாபங்களை ஈட்டத் தொடங்குகின்றதோ அந்த வரிமதிப்பீட்டாண்டிலிருந்து அல்லது எந்த வரிமதிப்பீட்டாண்டில் பொறுப்பு முயற்சி வாணிப தொழிற்பாடுகளைத் தொடங்கிய தேதியிலிருந்து

கணிப்பிடப்பட்ட இரண்டாண்டு காலப்பகுதியைப் பூர்த்தி செய்கின்றதோ அந்த வரிமதிப்பீட்டை உடனடுத்துவரும் வரிமதிப்பீட்டாண்டின் தொடக்கத்திலிருந்து, இவற்றுள் எது முந்தியதோ, அதிலிருந்து கணிப்பிடப்படும் ஐந்தாண்டுக் காலப்பகுதிக்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்:

ஆயின், எந்தக் காலப்பகுதிக்கு இலாங்களும் வருமானமும் வரிமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுகின்றதோ அந்தக் காலப்பகுதி 2008, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்குப் பின்னர் தொடங்குமிடத்து எந்தக் காலப்பகுதிக்கு அத்தகைய இலாபங்களும் வருமானமும் விலக்களிக்கப்பட வேண்டுமோ அந்தக் காலப்பகுதி மூன்றாண்டுகளாதல் வேண்டும்.”.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில், “2008, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு” என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, “2009, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு” என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலமும் ; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் (உ) என்னும் பந்தியில், “2008, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு” என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, “2009, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு” என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், “2008, மாச்சு 31ஆம் தேதிக்குப் பிந்தாத” என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, “2009, மாச்சு 31 ஆம் தேதிக்குப் பிந்தாத” என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 21அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது அச்சட்டவாக்கத்தின் 21அ என்னும் பிரிவு என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும் :-

*"குறித்தசில மாவட்டங்களிலிருந்து மீளமைக்கப்பட்ட பொறுப்பு முயற்சிகளின் இலாபங்களுக்கு வருமானத்திற்கு விலக்களித்தல்."*

21அ. (1) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் மீளமைக்கப்பட்ட பொறுப்பு முயற்சியிலிருந்து ஏதேனும் கம்பெனியின், 3 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக் குட்பட்ட இலாபங்களும் வருமானமும் (ஏதேனும் மூலதனச் சொத்தின் விற்பனையிலிருந்தான எவையேனும் இலாபங்களாயும் வருமானமாயும் அல்லாத) 2009, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று தொடங்கும் ஐந்தாண்டுகளைக் கொண்ட ஒரு காலப்பகுதிக்குட்பட்ட வரிமதிப்பீட்டாண்டு ஒவ்வொன்றிற்கும் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்கு ஏதேனும் கம்பெனி தொடர்பிலும் மற்றும் (1) ஆம் உட்பிரிவின் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பிலும் "மீளமைக்கப்பட்ட பொறுப்பு முயற்சி" ஒன்று என்பது –

(அ) 2007, நவெம்பர் 1 ஆம் தேதிக்கு முன்னர் எந்தப் பொறுப்பு முயற்சியில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள நூறுபேருக்குக் குறையாத தனியாட்களுடன் கொழும்பு அல்லது கம்பஹா நிர்வாக மாவட்டத்திற்குட்பட்ட ஏதேனும் அமைவிடத்தில் அக்கம்பெனியால் கொண்டு நடாத்தப்பட்டு வந்துள்ளதோ,

(ஆ) கொழும்பு அல்லது கம்பஹா நிர்வாக மாவட்டத்திற்கு வெளியே ஏதேனும் அமைவிடத்தில் மீளமைக்கப்பட்டுள்ளதும், 2009, மாச்சு 31 ஆம் தேதிக்குப் பிந்தாதவொரு தேதியில் தொடங்கி அந்த வரிமதிப்பீட்டாண்டு முழுவதும் தொடர்ந்து :-

(i) வாணிக தொழிற்பாடுகளைக் கொண்டு நடாத்துகின்றதோ ; அத்துடன்

(ii) 2007, நவெம்பர் 1 ஆம் தேதியன்றுள்ளவாறு தொழிலுக்கமர்த்தப்பட்டிருந்த எண்ணிக்கைக்குக் குறையாத அத்தகைய எண்ணிக்கையினரான தனியாட்களை தொழிலுக்கமர்த்தியுள்ளதோ ;

(இ) எந்தப் பொறுப்பு முயற்சி தொடர்பில் மீளமைத்தலில் கூறப்பட்ட செலவினம் நூறு மில்லியன் ரூபாய்களுக்குக் குறையாதிருக்கின்றதோ ; அத்துடன்

(ஈ) மூன்றாம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக்குள் எந்தப் பொறுப்பு முயற்சியின் இலாபங்களும் வருமானமும் (ஏதேனும் மூலதனச் சொத்தின் விற்பனையிலிருந்தான எவையேனும் இலாபங்களாயும் வருமானமாயும் அல்லாத) இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டின்கீழ் அல்லது 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் இலங்கை முதலீட்டுச் சபையுடன் செய்து கொள்ளப்பட்ட ஏதேனும் உடன்படிக்கையின்கீழ் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளதோ,

அந்தப் பொறுப்பு முயற்சி ஒன்று என்று பொருள்படும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**14.** அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "பொறுப்பு முயற்சியானது எந்த வரி மதிப்பீட்டாண்டில் இலாபங்கள் ஈட்டத் தொடங்குகின்றதோ" என்பதிலிருந்து அவ்வுட்பிரிவின் முடிவுவரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாகப் பின்வரும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"பொறுப்பு முயற்சியானது அந்த வரிமதிப்பீட்டாண்டில் செய்துகொள்ளப்பட்ட கொடுக்கல், வாங்கல்களிலிருந்து எந்த வரிமதிப்பீட்டாண்டிலிருந்து இலாபங்களை ஈட்டத் தொடங்குகின்றதோ அந்த வரிமதிப்பீட்டாண்டிலிருந்து அல்லது பொறுப்பு முயற்சியானது எந்த வரிமதிப்பீட்டாண்டில் வாணிபத் தொழிற்பாடுகள் எந்தத் தேதியில் ஆரம்பிக்கப்பட்டதோ அந்தத் தேதியிலிருந்து கணிப்பிடப்படும் இரண்டாண்டுக் காலப்பகுதியொன்றைப் பூர்த்தி செய்கின்றதோ அந்த வரிமதிப்பீட்டாண்டை உடனடுத்து வரும் வரிமதிப்பீட்டாண்டின் தொடக்கத்திலிருந்து, இவற்றுள் எது முந்தியதாகவுள்ளதோ அதிலிருந்து கணிப்பிடப்படும் ஐந்தாண்டு காலப்பகுதிக்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும் :

ஆயின், இலாபங்களும் வருமானமும் எந்தக் காலப்பகுதிக்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுகின்றனவோ அந்தக் காலப்பகுதி 2008, ஏப்பிறல் 1 ஆம் தேதியின் பின்னர் தொடங்குமிடத்து எந்தக் காலப்பகுதிக்கு அத்தகைய இலாபங்களும் வருமானமும் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுகின்றனவோ அந்தக் காலப்பகுதி மூன்றாண்டுகளாதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**15**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் -

(அ) "3 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்துக்குட்பட்ட இலாபங்களுக்கும் வருமானமும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இதனகத்துப்பின்னர் பந்தி (அ), (ஆ) அல்லது (இ) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் கருத்திட்டத்திலான ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட முதலீட்டிலிருந்து பெறப்பட்ட, 3 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்துக்குட்பட்ட இலாபங்களும் வருமானமும்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அவ்வுட்பிரிவிற்கான காப்பு வாசகத்தை உடனடுத்துப் பின்வரும் மேலும் ஒரு காப்பு வாசகத்தைச் சேர்ப்பதன் மூலமும் :-

"ஆயின் மேலும், முயற்சி மூலதனக் கம்பெனி வாணிபத் தொழிற்பாடுகளை 2008, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குமிடத்து, எந்தக் காலப்பகுதிக்கு இலாபங்களும் வருமானமும் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுகின்றனவோ, அந்தக் காலப்பகுதி மூன்றாண்டுகளாதல் வேண்டும்." ;

(2) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவில் "செயல் நிறைவேற்றமற்ற" என்ற சொல்லமைப்பிற்கான வரைவிலக்கணத்தையும் மற்றும் "செயல் நிறைவேற்றம் குறைந்த" என்னும் சொல்லமைப்பிற்கான வரைவிலக்கணத்தையும் நீக்கஞ் செய்வதன் மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**16.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) உட்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள எவரேனும் ஆளின் 3 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக்குட்பட்ட" என்பதிலிருந்து "ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில்" என்னும் சொற்கள் வரையிலான எல்லாச் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "ஏதேனும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள எவரேனும் ஆளின் 3 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக்குட்பட்ட இலாபங்களும் வருமானமும் (மூலதனச் சொத்தின் விற்பனையிலிருந்து கிடைக்கும் எவையேனும் இலாபங்களாகவும் வருமானமாகவும் அல்லாத) அந்த வரிமதிப்பீட்டாண்டில் செய்யப்பட்ட கொடுக்கல், வாங்கல்களிலிருந்து எந்த வரிமதிப்பீட்டாண்டிலிருந்து இலாபமீட்டத் தொடங்குகின்றதோ அந்த வரிமதிப்பீட்டாண்டின் தொடக்கத்திலிருந்து அல்லது அத்தகைய வியாபாரம் வாணிபத் தொழிற்பாடுகளை எத்தேதியில் தொடங்

கியதோ “அத் தேதியிலிருந்து கணிப்பிடும் இரண்டாண்டுகளைப் பூர்த்தி செய்யும் வரிமதிப்பீட்டாண்டை உடனடுத்துவரும் வரிமதிப்பீட்டாண்டின் தொடக்கத்திலிருந்து” என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (2) ஆம் பிரிவை நீக்கஞ் செய்துவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :

“(2) ஓராம் உப்பிரிவின் ஏற்பாடுகள் 2003, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் இலங்கை உல்லாசப் பயணச் சபையுடன் பதிவு செய்யப்பட்ட ஆளொருவரால் கொண்டு நடாத்தப்படும் விசாலமான இல்லங்களில் அல்லது எழிலமைப்பான பங்களாக்களில் உல்லாசப் பயணிகளுக்கு தங்குமிட வசதியளிக்கும் ஏதேனும் வியாபாரம் தொடர்பிலும் மற்றும் அத்தகைய பதிவுத் தேதியிலிருந்து பத்தாண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 24இ மற்றும் 24ஈ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

**17**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 24ஆ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன், அவை முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு 24இ மற்றும் பிரிவு 24ஈ என்றாற் போன்று பயனுறுதலும் வேண்டும்:-

“கிழக்கு மாகாணத்திற்குள் அமைந்துள்ள எவையேனும் புதிய பொறுப்பு முயற்சிகளின் இலாபங்களும் வருமானமும் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல்.

24இ. (1) ஏதேனும் புதிய பொறுப்பு முயற்சியின் தொழிற்பாட்டிலிருந்து 3 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக்குட்பட்ட இலாபங்களும் வருமானமும் (ஏதேனும் மூலதனச் சொத்தின் கையுதிர்ப்பிலிருந்தான எவையேனும் இலாபங்களாயும் வருமானமாயும் அல்லாத) அத்தகைய பொறுப்பு முயற்சியானது எந்த வரிமதிப்பீட்டாண்டிலிருந்து இலாபங்களை ஈட்டத் தொடங்கியுள்ளதோ அந்த வரிமதிப்பீட்டாண்டிலிருந்து அல்லது வாணிக தொழிற்பாடுகளை எந்தத் தேதியில் தொடங்குகின்றதோ அந்தத் தேதியிலிருந்து கணிப்பிடும் இரண்டு ஆண்டுகளைப் பூர்த்தி செய்த வரி

மதிப்பீட்டாண்டிலிருந்து, இவற்றுள் எது முந்தியதோ அதிலிருந்து ஐந்தாண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.". அத்துடன்

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்கு "புதிய பொறுப்பு முயற்சி" என்பது -

(அ) 2007, நவெம்பர் 7 ஆம் தேதிக்கு முன்னர் உளதாயிருந்த பொறுப்பு முயற்சியொன்றைப் பிரிப்பதன் மூலம், புனர்நிர்மாணம் செய்வதன் மூலம் அல்லது கொள்ளுவதன் மூலம் உருவாக்கப்படாததும் ;

(ஆ) 2007, நவெம்பர் 7 ஆம் தேதியன்று அல்லது அதன்பின் வாணிபத் தொழிற்பாடுகளைத் தொடங்குவதும் ; அத்துடன்

(இ) கிழக்கு மாகாணத்திற்குள் அமைந்துள்ளதும்,

அத்துடன் அதில் 2010, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் முதலீடு செய்யப்பட்ட பணத்தொகை (காணியில் தவிர) முப்பது மில்லியன் ரூபாய்களை விடக் குறைவாக இல்லாததுமான ஒரு பொறுப்பு முயற்சி என்று பொருள்படும்.

ஏதேனும் பின்தங்கிய பிராந்தியத்தில் அமைந்துள்ள ஏதேனும் புதிய பொறுப்பு முயற்சியின் இலாபங்களுக்கு வருமானத்திற்கு விலக்களிக்கப் படுதல்.

24ஈ. (1) ஏதேனும் பின்தங்கிய இடப்பரப்பில் ஏதேனும் புதிய பொறுப்பு முயற்சியின் (ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட பொறுப்பு முயற்சியைத் தவிர) 3 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக்குட்பட்ட இலாபங்களும் வருமானமும் அந்த வரிமதிப்பீட்டாண்டில் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல், வாங்கல்களிலிருந்து அத்தகைய பொறுப்பு முயற்சி எந்த வரிமதிப்பீட்டாண்டில் இலாபமீட்டத் தொடங்கியதோ அந்த வரிமதிப்

பீட்டாண்டிலிருந்து அல்லது பொறுப்பு முயற்சி எந்தத் தேதியில் வாணிபத் தொழிற்பாடுகளைத் தொடங்கியதோ அந்தத் தேதியிலிருந்து கணிப் பிடப்படும் இரண்டு ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதியொன்றை எந்த வரிமதிப்பீட்டாண் டில் பூர்த்தி செய்கின்றதோ அந்த வரிமதிப்பீட் டாண்டிலிருந்து, இவற்றுள் எது முந்தியதோ அதிலிருந்து மூன்றாண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு வருமான வரியிலிருந்து விலக்களிக் கப்படுதல் வேண்டும்.

(2) இப்பிரிவின் நோக்கத்திற்கு "பின் தங்கிய பிராந்திய" என்பது, ஏதேனும் வரிமதிப் பீட்டாண்டு தொடர்பில் எவரேனும் தோதான அதிகாரியுடனான கலந்தா லோசனையுடன் அமைச்சரால் தீர்மானிக் கப்பட்டு அந்த வரி மதிப்பீட்டாண்டிற்கு உடன் முன்னரான வரிமதிப்பீட்டாண் டில் பொருளாதார ரீதியில் பின்தங்கியுள் ளதாக வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையால் குறித்துரைக்கப்பட்டது மான ஏதேனும் பிரதேசச் செயலாளரின் பிரிவு என்று பொருள்படும்;

"புதிய பொறுப்பு முயற்சி" என்பது,-

(அ) வாணிபத் தொழில் முயற்சியை 2008, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்றதும்; அத்துடன்

(ஆ) 2007, நவெம்பர் 7 ஆம் தேதியின் பின்னர் ஆனால் மாச்சு 31 ஆம் தேதிக்கு முன்னர் மூலதனச் சொத்துக்களின் (காணி அல்லாத) கொள்ளலில் முப்பது மில்லியன் ரூபாவுக்குக் குறையாமல் அதில் முதலீடு செய்துள்ளதுமான,

ஒரு பொறுப்பு முயற்சி என்பது பொருள் படும் ; அத்துடன்

"குறித்துரைக்கப்பட்ட பொறுப்பு முயற்சி" என்பது, அத்தகைய பொறுப்புமுயற்சியால் தயாரிக்கப்படாத அல்லது உற்பத்தி செய்யப் படாத ஏதேனும் பொருளின் விற்பனையில் ஈடுபட்டுள்ள ஒரு பொறுப்பு முயற்சி என்று பொருள்படும்.".

**18**. 2007 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப் பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவு இத் தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :- முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் :-

(அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்திக்கான காப்பு வாசகத்தின் (ஆ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில், "ஒரு கம்பெனிக்குச் சொந்தமானதும் அல்லது அதனால் வாடகைக்கு அமர்த்தப்பட்டதும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஒரு கம்பெனிக்குச் சொந்தமானதும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஓ) என்னும் பந்திக்கான காப்பு வாசகத்தின் (v) ஆம் பந்தியில் "அவர் தொழில் புரியும் இடத்துக்கு அல்லது மறுதலையாகச் செய்த" என்னும் சொற்களுக் குப் பதிலாக, "அவர் தொழில்புரியும் இடத் திற்கு அல்லது மறுதலையாகச் செய்த" என் னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "(1) ஆம் உட்பிரி வின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "(1) ஆம் உட்பிரிவின்" என்னும் சொற்களையும் இலக்கத்தை யும் இடுவதன் மூலமும் ;

(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்திக்கான மேலும் ஒரு காப்புவாசகத்தின் (ii) ஆம் பந்தியில், "அத்தகைய மூலதனச் சொத்தை மாற்றீடு செய்வதற்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, " அத்தகைய மூலதனச் சொத்தை மாற்றீடு செய்வதற்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(4) அப்பிரிவின் (7) ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியின் (vi) ஆம் உட்பந்தியில், "அத்தகைய சொத்தின் கையிருப்பின் வருவாய்கள் அத்தகைய ஆளினால் செலுத்தப்பட்ட குத்தகை வாடகைகளைத் தவிர கொள்ளின் செலவு எதனையும் கழித்து" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய சொத்துக்களின் கையிருப்பின் வருவாய்கள், அத்தகைய ஆளினால் அத்தகைய சொத்துக்கள் மீது செலுத்தப்பட்ட குத்தகை வாடகையைத் தவிர, கொள்ளலின் செலவு எதனையும் கழித்து" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**19**. 2007 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவின் (ப) உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :-

"இவ்வுட்பிரிவின் (த), (ந) அத்துடன் (ப) என்னும் உட்பந்திகளின் நோக்கத்திற்கு "ஊழியர்" என்னும் சொல்லமைப்பு இச்சட்டத்தின் 131 ஆம் பிரிவில் தரப்பட்டவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;" அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "25 (1) என்னும் பிரிவின் (அ) அல்லது (உ) என்னும் பந்தியின்கீழ் எனும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "25 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் அல்லது (இ) என்னும் பந்தியின்கீழ்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;"

**20**. 2007 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப் பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :- முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் :-

(அ) "பின்வருவன தவிர்ந்த அவரது மொத்த நியதிச் சட்டமுறையான வருமானமாதல் வேண்டும்-" என்னும் சொற்களுக்குப் பதிலாக, பின்வருவன தவிர்ந்த அவரது மொத்த நியதிச்சட்டமுறை யான வருமானமாதல் வேண்டும்-" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியின்கீழ் "விடயத்திற்கேற்ப, 134 ஆம் பிரிவின்கீழ் அல்லது 135 ஆம் பிரிவின்கீழ்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "134 ஆம் பிரிவின்கீழ்" என்னும் சொற்களை யும் இலக்கத்தையும் இடுவதன் மூலமும் ;"

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "வட்டி வருமானம்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில் "இப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் உட்பந்தி (ஆ) வில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இந்த உட்பிரிவின் (ஆ) என்னும் உபபந்தியில்" என்னும் சொற்களையும் இலக்கத்தையும் இடுவதன் மூலமும் ;"

(3) உட்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(உ) ஏதேனும் திறைசேரிமுறி முதலீட்டு வெளி நாட்டு ரூபாக் கணக்கிலிருந்து எடுக்கப்பட்ட நிதியங்களிலிருந்து எடுக்கப்பட்ட நிதியங்களி லிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஏதேனும் ரூபா மதிப்பீடுடைய திறைசேரி முறியிலிருந் தான அத்தகைய ஆளின் இலாபங்களும் வருமானமும் ;

(ஊ) அத்தகைய ஆள் இலங்கை மத்திய் வங்கியின் கடன் உத்தரவாத நிதியமாக இருக்குமிடத்து, (420 ஆம் அத்தியாயமான) பதிவு செய்யப்பட்ட பங்குத் தொகுதிகள், பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் திறைசேரி முறியிலிருந்து அல்லது (47 ஆம் அத்தியாயமான) உள்ளூர்த் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் திறைசேரி உண்டியல்களிலிருந்து அத்தகைய நிதியத்திற்குத் திரளுகின்ற வட்டி ;

(எ) 95 ஆம் பிரிவின்கீழ் வருமானவரி கழிப்பனவு செய்யப்பட்டுள்ளதும் 135 ஆம் பிரிவின் கருத் தெல்லைக்குள் இலங்கையிலுள்ள ஏதேனும் கம்பெனியால் அல்லது அதன் சார்பில் வழங் கப்பட்டதும் இலங்கைக்குள் கொண்டு வரப் பட்டு அத்கைய கொள்வனவுக்கென இலங்கை நாணயமாக மாற்றப்பட்ட வெளிநாட்டு நாண யத்திலிருந்து எவரேனும் ஆளினால் அல்லது ஏதேனும் பங்காண்மையால் கொள்வனவு செய்யப்பட்டதுமான ஏதேனும் கூட்டிணைப்புத் தனிநபர் பிணையத்தின் மீது அத்தகைய ஆளுக்கு அல்லது பங்காண்மைக்குத் திரளு கின்றதுமான வட்டி ; அத்துடன்

(ஏ) ஏதேனும் இரத்தினக் கல்லின் எந்த விற்பனை யின் மீது 161அ என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் 1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க, தேசிய இரத்தினக்கல், ஆபரணங்கள் கட்டளைச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட தேசிய இரத்தினக்கல், ஆபரணங்கள் அதிகாரசபை யால் வரியானது கழிப்பனவு செய்யப்பட்டுள் ளதோ அந்த ஏதேனும் விற்பனையிலிருந்தான இலாபங்களும் வருமானமும் .".

(4) உட்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில் –

(அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய ஆளினால்" செலுத்தப்பட்ட என்னும் சொற் களுக்குப் பதிலாக, "ஏதேனும் வரிமதிப்பீட் டாண்டிற்கு அத்தகைய ஆளினால் செலுத்தப் பட்ட" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் உட்பந்தியின் "பந்தி (இ) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பந்தி (இ) அல்லது பந்தி (ஈ) என்பதில் குறிப்பீடு செய்யப் பட்ட" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(இ) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியை உடன டுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்து வதன்மூலமும் ;

"(ஈ) ஏதேனும் நிதிக் குத்தகை வியாபாரத் தில், அத்தகைய நிதியச் சட்ட வரு மானத்தில் சேர்க்கப்பட்ட அத்தகைய வியாபாரத்திலிருந்தான எவையேனும் இலாபங்களின் அளவுக்கு 2008, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று உறப்பட்ட ஏதே னும் நட்டமும் மற்றும் அத்தகைய கழிப்பனவின் பின்னர் அத்தகைய நட்டத்தின் மீதி எதுவுமிருப்பின், அம் மீதியும் அந்த வரிமதிப்பீட்டாண்டை உடனடுத்துவரும் வரிமதிப்பீட்டாண் டிற்கான நட்டமொன்றாகக் கருதப் படுதல் வேண்டும் ;";

(5) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தி யில் "21 என்னும் பிரிவின்கீழ் அல்லது 22 என்னும் பிரிவின் கீழ், 23 என்னும் பிரிவின்கீழ், 24 என்னும் பிரிவின்கீழ்" என்னும் சொற்களுக்கும் இலக்கங் களுக்கும் பதிலாக,"21 ஆம் பிரிவின் கீழ், 22 ஆம் பிரிவின்கீழ் 23 ஆம் பிரிவின்கீழ், 24 ஆம் பிரிவின்கீழ், 24அ என்னும் பிரிவின்கீழ், 24ஆ என்னும் பிரி வின்கீழ், 24இ என்னும் பிரிவின்கீழ் அல்லது 24ஈ என்னும் பிரிவின்கீழ்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(6) அப்பிரிவின் (7) ஆம் பிரிவின், "இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட விதத்தில் நிச்சயிகப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட விதத்தில் நிச்சயிக்கப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

**21**. 2007 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :- முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (viii) என்னும் உட்பந்தியின் முடிவில் பின்வரும் புதிய உட்பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(ix) 2008 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, அப்பி வெனுவென் அப்பி நிதியத்தால் தாபிக்கப்பட்ட அப்பி வெனுவேன் அப்பி நிதியத்துக்கு ;";

(ஆ) அப்பிரிவின் (ஏ) என்னும் பந்தியில், "(ஏ) எந்தத் திரைப்படத்தின்" என்பதிலிருந்து "உறப்பட்ட செலவினம்" என்பது வரையிலான சொற்களுக் குப் பதிலாக, பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"(ஏ) (i) எந்தத் திரைப்படத்தின் தயாரிப்பு 2007, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் பூர்த்திசெய்யப்பட்டதோ அந்தத் திரைப் படத்தை ஐந்து மில்லியன் ரூபாவுக்குக் குறையாத செலவொன்றில் தயாரிப் பதில் எவரேனும் ஆளினால் உறப்பட்ட செலவினம் ; அல்லது

(ii) எந்தத் திரைப்படத்தின் தயாரிப்பு 2007, ஏப்பிறல் 1 ஆம் தேதியின் பின்னர் பூர்த்திசெய்யப்பட்டதோ அந்த ஏதேனும் திரைப்படைத்தை ஐந்து மில்லியன் ரூபாவுக்குக் குறையாத செலவொன்றில் தயாரிப்பதில் எவரேனும் ஆளினால் உறப்பட்ட செலவினம்:";

(இ) அவ்வுட்பிரிவின் (க) என்னும் பந்தியை உடன டுத்துப் பின்வரும் புதிய பந்திகளைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(ங) எந்தத் திரையரங்கில் –

(i) *திரைப்படங்களின் திரையிடல் 2008, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆரம்பிக்கின்றதோ ; அத்துடன்*

(ii) *எண்முறை தொழில் நுட்பவியல், எண் முறை திரையரங்க முறைமை அத்துடன் டொல்பி ஒலியியல் முறைமை போன்ற வசதிகள் கொண்டிருப்பதாக 1971 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய திரைப் படக் கூட்டுத்தாபனத்தால் தாபிக்கப்பட்ட இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாப னத்தால் சான்றுப்படுத்தப்பட்டுள்ளதோ,*

*அந்தத் திரையரங்கு ஒன்றாக இருக்கின்ற திரை யரங்கொன்றின் நிர்மாணத்திலும் சாதன அமைப்பிலும் உறப்பட்ட இருபது மில்லியன் ரூபாவை விஞ்சாத செலவினம் ;*

*(ச) எந்தத் திரையரங்கு –*

(i) *அதில் திரைப்படங்களின் திரை யிடல் 2008, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கியிருந்ததோ ;*

(ii) *அதில் 2008, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் எண்முறை தொழில்நுட்ப வியல், எண்முறை திரையரங்க முறைமை மற்றும் மொல்பி ஒல்வியல் முறைமை போன்ற சாதன வசதி களைக் கொண்டிருக்கவில்லையோ ; அத்துடன்*

(iii) *2008, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் எண்முறை தொழில்நுட்பவியல், எண்முறை திரையரங்க முறைமை அத்துடன் டொல்பி ஒலியியல்முறை போன்ற சாதன வசதிகளைக் கொண்டிருப்*

பதாக 1971 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய திரைப்படக் கூட்டுத் தாபனச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கைத் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தால் சான்றளிக்கப் பட்டுள்ளதோ,

அந்தத் திரையரங்கொன்றாகவிருக்கும் திரை யரங்கொன்றைத் தரமுயர்த்துவதில் உறப்பட்ட பத்து மில்லிய் ரூபாவை விஞ்சாத செலவினம் ;

(ஔ) பிரிவு 21அ என்பதன் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் மீளமைக் கப்பட்ட பொறுப்புமுயற்சியின் மீளமைப் பில் ஏதேனும் கம்பெனியால் உறப்பட்ட செலவினம் ; அத்துடன்

(உ) எவரேனும் ஆளினால் 13 ஆம் பிரிவின் (வவவ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய் யப்பட்ட பொறுப்புமுயற்சியொன்றில் முதலீடுசெய்யப்பட்ட ஏதேனும் பணத் தொகை;";

(2) (அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (i) ஒன்றும் உட்பந்தியில் "(ஐ), (ஒ), (ஓ) என்ப வற்றில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "(ஐ), (ஒ), (ஓ), (ங), (ச) அத்துடன் (ட) என்பவற்றில்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(ஆ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (iii) (ஆ) என்னும் உட்பந்தியில் "இருபத்தைந்து மில்லியன் ரூபாவையும்" என்னும் சொற்களுக் குப் பதிலாக "முப்பத்தைந்து மில்லியன் ரூபா வையும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(இ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (vi) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளைச் சேர்ப்பதன்மூலமும் :-

(vii) அந்த வரிமதிப்பீட்டாண்டில் அவரால் செய்யப்பட்ட (2) ஆம் உட்பிரிவின் (ங) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப் பட்ட எல்லாத் தகைமைபெறும் கொடுப் பனவுகள் தொடர்பிலும் இருபத்தைந்து மில்லியன் ரூபாவை விஞ்சுதலாகாது;";

(viii) அந்த வரிமதிப்பீட்டாண்டில் அவரால் செய்யப்பட்ட (2) ஆம் உட்பிரிவின் (ச) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப் பட்ட எல்லாத் தகைமைபெறும் கொடுப் பனவுகள் தொடர்பிலும் பத்து மில்லி யன் ரூபாவை விஞ்சுதலாகாது;";

(ஈ) "(ஓ), (ஔ) அத்துடன் (க) என்னும் பந்திகளில்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "(ஓ), (ஔ), (க), (ங), (ச) அத்துடன் (ட) என்னும் பந்திகளில்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலமும் ;

(உ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (ii) (ஆ) என்னும் உட்பந்தியில் ''இருபத்தைந்து மில்லியன் ரூபாவையும்,'' என்னும் சொற் களுக்குப் பதிலாக "முப்பத்தைந்து மில்லியன் ரூபாவையும்,'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(ஊ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (iv) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்திகளைச் சேர்ப்பதன்மூலமும் :-

"(iv) அக்கம்பெனியால் செய்யப்பட்ட (2) ஆம் உட்பந்தியின் (ச) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட எல்லாத்

தகைமைபெறும் கொடுப்பனவுகள் தொடர்பிலும் வரிமதிப்பிடற்குரியதான வருமானத்தின் ஐந்திலொரு பங்கை அல்லது ஐந்து இலட்சம் ரூபாவை இவற்றுள் எது குறைவானதோ அதனை விஞ்சுதலாகாது ;

(vi) அந்த வரிமதிப்பீட்டாண்டில் அந்தக் கம்பெனியால் செய்யப்பட்ட (2) ஆம் பிரிவின் (ங) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட எல்லாத் தகைமை பெறும் கொடுப்பனவுகள் தொடர்பிலும் இருபத்தைந்து மில்லியன் ரூபாவை விஞ்சுதலாகாது ;

(vii) அந்த வரிமதிப்பீட்டாண்டில் அந்தக் கம்பெனியால் செய்யப்பட்ட (2) ஆம் பிரிவின் (ச) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட எல்லாத் தகைமைபெறும் கொடுப்பனவுகள் தொடர்பிலும் பத்து மில்லியன் ரூபாவை விஞ்சுதலாகாது.";

(3) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில் "(இ) அல்லது (ஔ) என்னும் பந்திகளில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "(இ) அல்லது (ஏ) (ii) அல்லது (ஔ) அல்லது (க), அல்லது (ங) அல்லது (ச) அல்லது (ட) என்னும் பந்திகளில்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(4) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவில் "(2) ஆம் உட்பிரிவின் (ஏ) என்னும் பந்தியில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "(2) ஆம் உட்பிரிவின் (ஏ) (i) என்னும் பந்தியில்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்,

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**22.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவிற்கான காப்புவாசகத்தில் "முதலாம் அட்டவணையின் 1 ஆம் பாகம் Vஇ வில் குறித்துரைக்கப்பட்ட" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "முதலாம் அட்டவணையின் பாகத்தில் குறித்துரைக்கப்பட்ட" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**23.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "இவ்வத்தியாயத்தின் அல்லது X ஆம் அத்தியாயத்தின் முரணாக எது எப்படியிருப்பினும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இச்சட்டவாக்கத்தின் வேறு ஏற்பாடு களில் முரணாக எது எப்படியிருப்பினும், ஆனால் இச்சட்டத்தின் 16 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 48ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**24.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப் படுகின்றது :-

"வரி விலக்களிப்புக் காலப்பகுதி முடிவடைந்த பின்னரான காலப்பகுதி களுக்கான வருமானவரி வீதங்கள்.

48. (1) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடுசெய் யப்பட்ட ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு எவரேனும் ஆளின் -

(அ) பிரிவு 17, பிரிவு 18 அல்லது பிரிவு 19இல் குறிப்பீடுசெய்யப்பட்ட குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் பொறுப்பு முயற்சியிலிருந்து ;

(ஆ) பிரிவுகள் 20, 22, 24இ அத்துடன் 24ஈ என்பவற்றில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதே னும் புதிய பொறுப்பு முயற்சியிலிருந்து ;

(இ) பிரிவுகள் 21 அத்துடன் 21அ என்பதில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் மீளமைக் கப்பட்ட பொறுப்புமுயற்சியிலிருந்து ;

(ஈ) 23 ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் முயற்சி மூலதனக் கம்பெனி யிலிருந்து ;

(உ) 24 ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் வியாபாரத்திலிருந்து ;

(ஊ) 24அ என்னும் பிரிவில் குறிப்பீடுசெய்யப் பட்ட ஏதேனும் புதிய திரையரங்கிலிருந்து அல்லது தரமுயர்த்தப்பட்ட திரையரங்கி லிருந்து ; அல்லது

(எ) 24ஆ என்னும் பிரிவில் குறிப்பீடுசெய்யப் பட்ட மீளத் திறக்கப்பட்ட கைவிடப்பட்ட ஏதேனும் தொழிற்சாலையிலிருந்து ;

பெறப்பட்ட இலாபங்களும் வருமானமும் அடங்கிய வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் அத்தகைய பாகம் இச்சட்டத்தின் வேறு ஏதேனும் ஏற்பாட்டில் முரணாக உள்ளது எது எவ்வாறிருப்பினும், அந்த வரிமதிப்பீட் டாண்டிற்கு ஏற்புடைத்தாக இருப்பதாக அவ்வுட் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட வீதப்படி வரி விதிக்கப்படற்பாலதாதல் வேண்டும்.

(2) விலக்களிப்புக் காலப்பகுதியை உடனடுத்து வரும் வரிமதிப்பீட்டாண்டிற்கு ஏற்புடைத்தான வரிவீதம் பின்வருமாறு இருத்தல் வேண்டும் :-

(அ) 2008 ஏப்பிறல் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டான

எந்தக் காலப்பகுதிக்கு இலாபங்களும் வருமானமும் வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்படுகின்றதோ அந்தக் காலப்பகுதியின் முடிவை உடனடுத்து வரும் வரிமதிப்பீட்டாண்டிற்கு (இதனகத்துப்பின்னர் ''விலக்களிப்பின் பின்னரான முதலாவது ஆண்டு'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) *ஐந்து சதவீதம்* ஆதல் வேண்டும் ;

(ஆ) விலக்களிப்பின் பின்னரான முதலாவது ஆண்டின் முடிவை உடனடுத்துவரும் வரி மதிப்பீட்டாண்டிற்கு (இதனகத்துப்பின்னர் “விலக்களிப்பின் பின்னரான இரண்டாவது ஆண்டு” எனக் குறிப்பீடுசெய்யப் படும்) *பத்துச் சதவீதம்* ஆதல் வேண்டும் ; அத்துடன்

(இ) விலக்களிப்பின் பின்னரான இரண்டாவது ஆண்டின் முடிவை உடனடுத்துவரும் வரிமதிப்பீட்டாண்டிற்கு *பதினைந்து சதவீதம்* ஆதல் வேண்டும்;".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 53 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**25.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 53 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "பதினைந்து சதவீதமாதல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "2008 ஆம் ஆண்டின் ஏப்பிறல் 1 ஆம் திகதியிலிருந்து தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கு *பத்து சதவீதம்* ஆதல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 54 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**26.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 54 ஆம் பிரிவு, "10 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "10 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 61 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**27.** 2007 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 61 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :-

(1) அப்பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில் "அத்தகைய கம்பெனியானது முற்போந்த ஆண்டிற்கான பகிர்ந்தளிக்கப்படக்கூடிய இலாபங்களின் இருபத்தைந்து சதவீதத்திற்குக் குறைவான தொகையிலான பங்கிலாபங்களை பகிர்ந்தளித்துள்ளவிடத்து" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய கம்பெனியானது அத்தகைய முற்போந்த ஆண்டின் தொடக்கத்தை உடனடுத்துவரும் பதினெட்டு மாதங்களைக் கொண்டவொரு காலப்பகுதிக்குள் அத்தகைய பகிர்ந்தளிக்கப்படற்பாலதான இலாபங்களிலிருந்து அந்த ஆண்டிற்கான பகிர்ந்தளிக்கப்படக்கூடிய இலாபங்களின் இருபத்தைந்து சதவீதத்திற்குக் குறைவான தொகையிலான பங்கிலாபங்களைப் பகிர்ந்தளித்துள்ளவிடத்து" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பந்தியில் "இயைபான பாகம்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில் :-

(அ) அந்த வரைவிலக்கணத்தின் (ஆ) என்னும் பந்தியை நீக்கஞ்செய்துவிட்டு அதற்குப் பதிலாக, பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :-

"(ஆ) அப்பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட காலப்பகுதியில் 7 ஆம் பிரிவின் (ஏ) என்னும் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் பதிவுசெய்யப்பட்ட சங்கத்திற்கு;";

(ஆ) அந்த வரைவிலக்கணத்தின் (ஈ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளைச் சேர்ப்பதன்மூலமும் :-

"(உ) ஏதேனும் உறு நம்பிக்கைப்பொறுப்புக்கு அல்லது பரஸ்பர நிதியத்திற்கு;

(ஊ) 2008 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, அப்பி வெனுவென் அப்பி நிதியச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட அப்பி வெனுவென் அப்பி நிதியத்திற்கு;".

**28**. முதன்மைச் சட்டத்தின் 62 ஆம் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 62 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(அ) வதிவுள்ள கம்பெனியொன்றினால் அத்தகைய வதிவற்ற கம்பெனிக்குச் செலுத்தப்பட்ட ஏதேனும் பங்கிலாபத்தை உள்ளடக்காத அத்தகைய பணத் தொகைகளாக, கம்பெனியின் வருமானவரி அறவிடப்படற்பாலதான இலாபங்களிலும் வருமானத்திலுமிருந்து வெளிநாட்டிற்கு அனுப்பப்பட்ட அல்லது வெளிநாட்டில் பிடித்துவைக்கப்பட்ட பணத்தொகை

கள் எனவும் எந்தக் கம்பெனியின் இலாபங்கள் இலங்கையில் வருமானவரி அறவிடப்படற்பாலதாகின்றதோ அந்தக் கம்பெனியால் கொண்டுநடாத்தப்படும் ஏதேனும் வர்த்தகம், வியாபாரம், உயர் தொழில் அல்லது வாழ்க்கைத்தொழில் தொடர்பில் அத்தகைய கம்பெனியால் அல்லது அதன் சார்பில் இலங்கைக்கு வெளியெ பெறப்பட்ட ஏதேனும் பணத்தொகை எனவும்;";

முதன்மைச் சட்டவாக்கத்தின் 65 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**29**. 2007 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 65 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன்மூலமும் :-

"(இ) 2008 ஆம் ஆண்டின் ஆம் இலக்க அப்பி வெனுவென் அப்பி நிதியச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட அப்பி வெனுவென் அப்பி நிதியத்தை;

(ஈ) அப்பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட காலப் பகுதியில் 7 ஆம் பிரிவின் (ஏ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் பதிவு செய்யப்பட்ட சங்கத்தை ;

(உ) அப்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டவாறு அத்தகைய ஆளினால் பெறப்பட்ட ஏதேனும் பங்கிலாபம் தொடர்பில் 10 ஆம் பிரிவின்கீழ் வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்பட்டவரான எவரேனும் ஆள்,";

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன்மூலமும் ;

"(4) ஏதேனும் வதிவுள்ள கம்பெனியால் 61 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் உட் (i) ஆம் பந்தியின் கீழ்ச்

செலுத்தப்படற்பாலதான வரியை விஞ்சி (1) ஆம் உட்பிரிவின்கீழ் அத்தகைய கம்பெனியால் செய்யப்பட்ட கழிப்பனவுகளின் கூட்டுமொத்தத்தின் மிகையானது, (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட மொத்தப் பங்கிலாபம் செலுத்தப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களைக் கொண்டவொரு காலப்பகுதிக்குள் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பப்படுதல் வேண்டும்;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 79 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**30.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 79 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவுக்கான காப்புவாசகத்தில் "கருதப்படுதல் வேண்டும்," என்னும் சொற்களுக்குப் பதிலாக "கருதப் படுதல் வேண்டும் :" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவுக்கான காப்பு பின்வரும் புதிய காப்பு வாசகத்தைச் சேர்ப்பதன்மூலமும் :-

"ஆயின், தனியாள் எவரும் 2008 ஏப்பிறல் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் இப்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் வழிவந்த ஒருவர் எனக் கருதப்படுதலாகாது."

முதன்மைச் சட்டவாக்கத்தின் 95 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**31.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 95 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்தில் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அக்காப்பு வாசகத்திற்கான (அ) என்னும் பந்தியில் "விதிக்கப்படுதற்குரியதாதல் வேண்டும் ; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "விதிக்கப்படுவதற்குரியதாதல் வேண்டும்;" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(2) அக்காப்புவாசகத்திற்கான (அ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(அஅ) 32 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (எ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்டதும் 2008 ஏப்பிறல் 1 ஆம் திகதியன்று அல்லது அதன்பின்னர் செலுத்தப்பட்டதுமான அல்லது வரவுவைக்கப்பட்டதுமான ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட தனிசுப்பிணையத்தின் மீதான வட்டியிலிருந்து இப்பிரிவின் கீழான வரிக்கழிப்பனவு இச்சட்டத்தின் வேறு ஏதேனும் ஏற்பாட்டில் முரணாக உள்ளமை எது எவ்வாறிருப்பினும் பத்துச் சதவீதப்படியாதல் வேண்டும் ; அத்துடன்".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 102 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**32**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 102 ஆம் பிரிவு அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "செலுத்தப்படற்பாலதான வரியைக் குறைக்கலாம் அல்லது தணிக்கலாம்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "செலுத்தப்படற்பாலதான வரியைக் குறைக்கலாம் அல்லது அகற்றலாம்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 104 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**33**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 104 ஆம் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "1 ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட முகவரியிடப்பட்ட" என்னும் சொற்களுக்குப் பதிலாக "(1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட இரண்டு இணைப்பொறுப்பு முயற்சிகளுள் ஒன்றை அல்லது அவை இரண்டையும் கொண்டுநடாத்துகின்ற குறிப்பீடுசெய்யப்பட்ட ஆளுக்கு முகவரியிடப்பட்ட" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 107 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**34**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 107 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்தில் அக்காப்பு வாசகத்திற்கான (அ) என்னும் பந்தியை நீக்கஞ்செய்துவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும் :-

"(அ) அத்தகைய வர்த்தகம், வியாபாரம், உயர் தொழல் அல்லது வாழ்க்கைத்தொழில் ஏதேனும் விலைகோரிப் பெறப்பட்ட கம்பெனியால்

அல்லது அந்த ஆண்டிற்கு இருநூற்றி ஐம்பது மில்லியன் ரூபாவுக்குக் குறையாத மொத்த விற்பனை வரவை அல்லது நூறு மில்லியன் ரூபாவுக்குக் குறையாத தேறிய இலாபத்தை யுடைய வேறு ஏதேனும் கம்பெனியால் கொண்டு நடாத்தப்படுமிடத்து, அப்போது அத்தகைய விலைகோரிப் பெறப்பட்ட பகிரங்கக் கம்பெனிக்கு அல்லது வேறு கம்பெனிக்கு இப்பிரிவின்கீழ் அறிவித்தலொன்று வழங்கப் பட்டிருக்கவில்லை என்பது எவ்வாறிருப்பினும் வரிமதிப்பீட் டாண்டு ஒவ்வொன்றுக்கும் அல்லது வேறு எந்தக் காலப்பகுதி தொடர்பில் அந்த வரி மதிப்பீட்டாண்டிற்கு நியதிச்சட்ட வருமானம் கணிப்பிடப்படுகின்றதோ அந்த வேறு ஏதே னும் காலப்பகுதிக்கு வர்த்தமானியில் வெளி யிடப்பட்ட அறிவித்தல்மூலம் ஆணையாளர் தலைமையதிபதியால் விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய கூற்றுக்களையும் அத்துடன் அத்தகைய அட்டவணைகளையும் கொடுத்துதவுதல் வேண்டும்.";

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவிற்கான காப்புவாச கத்தை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் காப்புவாசகத்தை இடுவதன்மூலமும் :

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 113 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**35.** 2007 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத் தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 113 ஆம் பிரிவு அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் உட்பந்தியில் "அந்த வரிமதிப்பீட்டாண்டை உடனடுத்து வரும் வரிமதிப்பீட் டாண்டின் மே மாதம் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "அந்த வரிமதிப்பீட்டாண்டின் செத்தெம்பர் முப்பதாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

"ஆயினும் –

(அ) ஏதேனும் விலைகோரிப் பெறப்பட்ட பகிரங்கக் கம்பெனியால் கொடுத்துதவப்பட்ட ;

(ஆ) வேறு எந்தக் கம்பெனியின் அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அல்லது வேறு ஏதேனும் காலப்பகுதிக்கு, அந்த வரிமதிப்பீட்டாண்டிற்குக் கணிக்கப்பட்டதான அந்த வர்த்தகத்தில், வியாபாரத்தில், உயர்தொழிலில் அல்லது வாழ்க்கைத்தொழிலிலிருந்தான நியதிச்சட்ட வருமானத்தின் இலாபங்களின்மீதான இலாபங்களின் மீது ஏதேனும் அத்தகைய வர்த்தகத்தின், வியாபாரத்தின், உயர்தொழிலின் அல்லது வாழ்க்கைத்தொழிலின் மொத்த விற்பனை வரவு இருநூற்றி ஐம்பது மில்லியன் ரூபா வுக்குக் குறையாததாக அல்லது அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அந்த வர்த்தகத்தில், வியாபாரத்தில், உயர்தொழிலில் அல்லது வாழ்க்கைத் தொழிலிலிருந்தான நியதிச்சட்டவருமானம் நூறு மில்லியன் ரூபாவுக்குக் குறையாததாக இருக்கின்றதோ அந்த வேறு ஏதேனும் கம்பெனியால் கொடுத்து தவப்பட்ட ; அல்லது

(இ) ஏதேனும் பங்காண்மையால் அல்லது கம்பெனியொன்றைத் தவிர வேறு எவரேனும் ஆளினால் கொண்டுநடாத்தப்படும் அல்லது பிரயோகிக்கப்படும் ஏதேனும் வர்த்தகம், வியாபாரம், உயர்தொழில் அல்லது வாழ்க்கைத்தொழில் தொடர்பில் அத்தகைய ஏதேனும் பங்காண்மையின் பங்காளரால், அந்த வர்த்தகத்தில், வியாபாரத்தில், உயர்தொழிலில் அல்லது வாழ்க்கைத்தொழிலிலிருந்தான நியதிச்சட்ட வருமானம் இருபத்தைந்து மில்லியன் ரூபாவுக்குக் குறையாததாக அல்லது அந்தப் பங்காண்மையின் பிரிக்கப்படற்பாலதான இலாபங்கள் அல்லது விடயத்திற்கேற்ப அந்த வர்த்தகத்தில், வியாபாரத்தில், உயர்தொழிலில் அல்லது வாழ்க்கைத்தொழிலிலிருந்தான நியதிச்சட்ட வருமானம் இருபத்தைந்து மில்லியன் ரூபாவுக்குக் குறையாததாக இருக்குமிடத்து அந்த ஏதேனும் பங்காண்மையின் பங்காளரால் அல்லது ஒரு கம்பெனியைத் தவிர்ந்த எவரேனும் ஆளினால் கொடுத்துதவப்பட்ட,

ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு அல்லது எந்தக் காலப் பகுதியின் இலாபங்களினமீது நியதிச்சட்ட வருமானம் எந்த வரிமதிப்பீட்டாண்டிற்குக் கணிப்பிடப்படுகின்றதோ அந்த வேறு ஏதேனும் காலப்பகுதிக்கு வருமானத்தின் விவரத் திரட்டு ஒன்றுக்கு ஆதாரமான கணக்குக்கூற்றொன்று அங்கீகரிக்கப்பட்ட கணக்காளர் ஒருவரின் கணக்காய்வின் அடிப்படையில் தயாரிக்கப்படுதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 131 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**36**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 131 ஆம் பிரிவு "தொழில் தருநர்" என்ற பதத்தின் வரைவிலக்கணத்தில், "ஆட்கள் குழுவினை அல்லது ஏதேனும் நிறுவகத்தை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தியாயம் XV இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் அரசாங்க நிறுவனம் அல்லாத ஆட்கள் குழுவினை அல்லது ஏதேனும் நிறுவகத்தை" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் அத்தியாயம் XV இற்கான தலைப்பைத் திருத்துதல்.*

**37**. முதன்மைச் சட்டவாக்கத்தின் அத்தியாயம் XV என்பதற்கான தலைப்பு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் தலைப்பு இடப்படுகின்றது :

"**அரசாங்க நிறுவனமொன்றினால் வருமானவரி கொடுப்பனவு செய்யப்படுதல், அத்துடன் ஏதேனும் அரசாங்க நிறுவனத்தின் எவரேனும் ஊழியரின் அலுவலக முறையான வேதனாதிகள் மீதான வரிமிலிருந்து கழிப்பனவு செய்தல் தொடர்பிலான ஏற்பாடுகள்**."

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 132 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**38**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 132 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் -

(அ) "அத்தகைய நிறுவனத்தினால் செலுத்தப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2008, மாச்சு 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடையும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய நிறுவனத்தால் செலுத்தப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(ஆ) அவ்வுட்பிரிவுக்கான காப்புவாசகத்தை நீக்கஞ் செய்துவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் காப்புவாசகத்தை இடுவதன் மூலமும் :-

"ஆயினும் அவ்வாறு செலுத்தப்பட்ட அத்தகைய வருமான வரி முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ அத்தகைய ஊழியருக்கு மீளளிப்புச் செய்யப்படுதலோ அல்லது அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய ஊழியரால் வேறு வகையில் செலுத்தப்படற்பாலதான வருமான வரியிலிருந்து கழிப்பனவு செய்யப்படுதலோ ஆகாது.".

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "எவ்வாறிருப்பினும்" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "எவ்வாறிருப்பினும் (1) ஆம் உட்பிரிவின் நோக்கத்திற்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(3) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில், "அரசாங்க நிறுவனம்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நீக்கஞ் செய்வதன் மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 132 அ என்னும் பிரிவை உட்புகுத்துதல்.*

**39**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 132 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 132அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

*"ஏதேனும் அரசாங்க நிறுவனத்தின் எவரேனும் ஊழியரின் அலுவலக முறையான வேதனாதிகள் மீதான வருமான வரியிலிருந்தான கழிப்பனவு*

132அ. (1) ஏதேனும் அரசாங்க நிறுவனத்தின் எந்த ஊழியரின் வரிமதிப்பிடற்பாலதான வருமானம் அலுவலக முறையான வேதனாதிகளை உள்ளடக்குகின்றதோ அந்த எவரேனும் ஊழியரால் 2008, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்குச் செலுத்தப்படற்பாலதான வருமான வரியிலிருந்து (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அத்தகைய தொகை கழிப்பனவு செய்யப்படுதல் வேண்டும்.

(2) கழிப்பனவானது, அத்தகைய வரிமதிப்பீட் டாண்டுக்காக (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய் யப்பட்ட அத்தகைய ஊழியர்மீது விதிக்கப்பட வருமானவரிக்கு, அவ்வரிமதிப்பீட்டாண்டுக்காக அத்தகைய ஊழியரின் (ஏதேனும் ஓய்வூதியம், மிகையூதியம், ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள், வெகுமதி, குற்றப்பணங்களின் பங்கு அல்லது வேறு இதை ஒத்த கொடுப்பனவு என்பன அல்லாத) அலுவலக முறையான வேதனாதிகள் அவ்வரிமதிப்பீட்டாண்டுக்காக அவ்வூழியரின் மொத்த நியதிச் சட்டமுறையான வருமானத்துக்கு எந்த விகிதாசாரத்தைக் கொண்டுள்ளதோ அதே விகிதாசாரத்தைக் கொண்டவொரு தொகையாதல் வேண்டும்.

இப்பிரிவின் (1) ஆம், (2) ஆம் உட்பிரிவுகளின் நோக்கத்துக்காக, “அலுவலகமுறையான வேத னாதிகள்” என்பன, அளிக்கப்பட்ட சேவைகளுக் காகப் பெறப்பட்ட, 4 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரி வின் (அ) என்னும் பந்தியிற் குறித்துரைக்கப் பட்டவாறான தொழிலிருந்தான இலாபங்கள் என்று பொருளாகும்.

(3) இவ்வத்தியாயத்தின் நோக்கத்துக்காக, “அரசாங்க நிறுவனம்” என்பது, 8 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் பதவியை வகிக் கின்ற தனியாட்களைத் தொழிலுக்கமர்த்துகின்ற ஏதேனும் நிறுவனம் அல்லது எவரேனும் ஆள் என்று பொருளாகும்.”.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 133 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**40**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 133 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் -

(அ) அவ்வுட்பிரிவின் (அ) எனும் பந்தியில் -

(i) அப்பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில், "திரட்டு நிதியம் ; அல்லது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "திரட்டு நிதியம்;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ii) அப்பந்தியில் (iii) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்தி களைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(iv) ஏழாம் பிரிவின் (ஏ) என்னும் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட, அப் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட காலப்பகுதியின்போது அத்தகைய சங்கத்துக்குச் செலுத்தப்பட்ட வட்டியாகவுள்ள, 7 ஆம் பிரிவின் (ஏ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பதிவுசெய் யப்பட்ட சங்கம் ; அல்லது

(v) 2008 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, அப்பி வெனுவென் அப்பி நிதியச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட "அப்பி வெனுவென் அப்பி நிதியம்;";

(ஆ) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில், "அல்லது 96 ஆம் பிரிவின்கீழ்" என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக, "அல்லது 95 ஆம் பிரிவின்கீழ்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ;";

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில், "இப்பிரிவின்கீழ்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ்" என்னும் சொற்களையும் எண்ணையும் இடுவதன்மூலமும் ;

(3) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில், "எவரேனுமாளுக்கு அல்லது ஏதேனும் பங்குடைமைக்குச் செலுத்தப்

படற்பாலதான ஏதேனும் வட்டி” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “எவரேனுமாளுக்கு அல்லது ஏதேனும் பங்குடைமைக்குச் செலுத்தப்படற்பாலதான (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் வட்டியானது அல்லது (2) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் மிகையானது” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும் ;

(4) அப்பிரிவின் (7) ஆம் உட்பிரிவில் –

(அ) “செலுத்தப்பட்ட ஏதேனும் வட்டியிலிருந்து (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க வருமான வரியைக் கழிக்கின்ற” என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக, “(1) ஆம் உட்பிரிவிற்கிணங்கச் செலுத்தப்பட்ட வட்டியிலிருந்து அல்லது (2) ஆம் உட்பிரிவிற்கிணங்க மிகையின்மீது வருமான வரியைக் கழிக்கின்ற” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும் ;

(ஆ) அவ்வுட்பிரிவின் (அ), (இ) என்னும் பந்திகளிற் காணப்படுகின்ற “வட்டியின்” என்னும் சொல்லுக்கும், அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியிற் காணப்படுகின்ற “வட்டி” என்னும் சொல்லுக்கும் பதிலாக, முறையே “வட்டியின் அல்லது மிகையின்” மற்றும் “வட்டி அல்லது மிகை” என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(5) அப்பிரிவின் (8) ஆம் உட்பிரிவில், அப்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில், “வட்டியிலிருந்து” மற்றும் “வட்டி” என்னும் சொற்களை எங்கெல்லாம் காணப்படுகின்றதோ அந்த இடங்களிலெல்லாம் அச்சொற்களுக்குப் பதிலாக, “வட்டியிலிருந்தும் அல்லது மிகையிலிருந்தும்” அத்துடன் “வட்டி அல்லது மிகை” என்னும் சொற்களை முறையே இடுவதன்மூலமும்.

**41.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 152 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 152 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**42.** இரண்டாயிரத்து ஏழாம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 153 ஆம் பிரிவு, இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 153 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவுக்கான காப்புவாசகத்தை உடனடுத்துப் பின்வரும் மேலதிகக் காப்புவாசகத்தைச் சேர்ப்பதன் மூலமும் :-

"ஆயின், மேலும், 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவுச் சட்டத்தின்கீழ் பொருளாதாரச் சேவை விதிப்பனவு விதிக்கப்படற்பாலவாறான ஆளொருவராக அல்லது பங்குடைமையொன்றாக எவரேனும் ஆள் பதிவு செய்யப்பட்டுள்ளாரென அல்லது ஏதேனும் பங்குடைமை பதிவுசெய்யப்பட்டுள்ளதென ஆணையாளர் தலைமையதிபதியின் திருப்திக்கு எண்பிக்கப்படுமிடத்து, வருமான வரியைக் கழித்தல் தொடர்பான இப்பிரிவின் ஏற்பாடுகள், 2008, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட கட்டணம் தொடர்பாக அத்தகைய ஆளுக்கு அல்லது பங்குடைமைக்கு ஏற்புடையனவாதலாகாதென ஆணையாளர் தலைமையதிபதி பணித்தல் வேண்டும்.";

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "குறித்துரைக்கப்பட்ட கட்டணம்" என்ற சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தில், "பாவனைக்கு அல்லது இருப்பாட்சிக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வதிவிடமொன்றாகவல்லாத பாவனைக்கு அல்லது வேறுவகையான இருப்பாட்சிக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 155 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**43.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 155 ஆம் பிரிவு, "கழித்தல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வரும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தாற் றிருத்தப்படுகின்றது :-

"கழித்தல் வேண்டும்:

ஆயின், 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவுச் சட்டத்தின்கீழ் பொருளாதாரச் சேவை விதிப்பனவு விதிக்கப்படற் பாலவாறான ஆளொருவராக அல்லது விதிக்கப் படற்பாலதான பங்குடைமையொன்றாக எவரேனும் ஆள் பதிவுசெய்யப்பட்டுள்ளாரென அல்லது ஏதே னும் பங்குடைமை பதிவுசெய்யப்பட்டுள்ளதென ஆணையாளர் தலைமையதிபதியின் திருப்திக்கு எண்பிக்கப்படுமிடத்து, வருமான வரியைக் கழித்தல் தொடர்பான இப்பிரிவின் ஏற்பாடுகள், 2008, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் செலுத்தப்படற்பாலதான அத்தகைய வாடகை, குத்தகை வாடகை அல்லது வேறு கொடுப்பனவு தொடர்பாக அத்தகைய ஆளுக்கு அல்லது பங்குடை மைக்கு ஏற்புடையனவாதலாகாதென ஆணையாளர் தலைமையதிபதி பணித்தல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 156 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**44.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 156 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "அவ்வாறு கழிப் பனவு செய்யப்பட்ட வருமான வரிக்கான வரவு, வங்கி களினதும் நிதி நிறுவனங்களினதும் கடமைகள்," என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அவ்வாறு கழிப் பனவு செய்யப்பட்ட வருமான வரிக்கான வரவு, பணிப்புகளை வழங்குதல், வங்கிகளினதும் நிதிநிறு வனங்களினதும் கடமைகள்," என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;"; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின் வரும் புதிய உட்பிரிவுகளைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(3) இவ்வத்தியாயத்தின்கீழ் எவரேனும் ஆளினால் அல்லது ஏதேனும் பங்குடைமையினால் கொடுக்கப்பட்ட ஏதேனும் வாடகையிலிருந்து, குத்தகை வாடகைகளிலிருந்து அல்லது வேறு கொடுப்பனவுகளிலிருந்து வருமானவரியைக் கழிப்பதற்கு ஆளாகவுள்ள எவரேனும் ஆள் அல்லது ஏதேனும் பங்குடைமை, அத்தகைய வரிக்கழிப்பனவு தொடங்குவதற்கு முப்பது நாட்களுக்குமுன்னர் பதிவிலக்கமொன்றுக்காக ஆணையாளர் தலைமையதிபதிக்கு விண்ணப்பித்து அவரிடமிருந்து அதனைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய கழிப்பனவுகள் தொடர்பாக ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய விபரங்களைக் கொண்டுள்ள விபரத்திரட்டொன்றை மாதாந்த அடிப்படையில் கொடுத்துதவுதலும் வேண்டும்.

(4) மூன்றாம் உப்பிரிவின்கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு பதிவுசெய்யாத அல்லது ஏதேனும் விபரத் திரட்டைக் கொடுத்துதவாத எவரேனும் ஆள் அல்லது ஏதேனும் பங்குடைம, ஆணையாளர் தலைமையதிபதியினால் விதிக்கப்படக்கூடியதும், ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாததுமான தண்டமொன்றுக்கு ஆளாதல் வேண்டும்.".

**45**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 160 ஆம் பிரிவு அப்பிரிவுக்கான காப்புவாசகத்தை உடனடுத்துப் பின்வரும் மேலதிகக் காப்பு வாசகத்தைச் சேர்ப்பதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :- *முதன்மைச் சட்டவாக்கத்தின் 160 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

"ஆயின், மேலும் 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவுச் சட்டத்தின்கீழ் பொருளாதாரச் சேவை விதிப்பனவு விதிக்கப்படற்பாலவரான ஆளொருவராக அல்லது விதிக்கப்படற்பாலதான பங்குடைமையொன்றாக எவரேனும் ஆள் பதிவுசெய்யப்பட்டுள்ளாரென அல்லது ஏதேனும் பங்குடைமை பதிவுசெய்யப்பட்டுள்ளதென ஆணையாளர் தலைமையதிபதியின் திருப்திக்கு

எண்பிக்கப்படுமிடத்து, வருமான வரியைக் கழித்தல் தொடர்பான இப்பிரிவின் ஏற்பாடுகள், 2008, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் செலுத்தப் படற்பாலதான ஏதேனும் ஆண்டுத்தொகை, அரசுரிமை அல்லது முகாமைக் கட்டணம் தொடர்பாக அத்தகைய ஆளுக்கு அல்லது பங்குடைமைக்கு ஏற்புடையனவாத லாகாதென ஆணையாளர் தலைமையதிபதி பணித் தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் XX அ என்னும் புதிய அத்தியாயத்தை உட்புகுத்துதல்.

**46**. முதன்மைச் சட்டவாக்கத்தின் XX ஆம் அத்தியாயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய அத்தியாயம் இத்தால் உட்புகுத் தப்படுகின்றதுதென்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் XX அ என்னும் அத்தியாயமாகப் பயனுடையதாதலும் வேண்டும் :-

"அத்தியாயம் XXஅ

**தேசிய மாணிக்கக் கற்கள் மற்றும் பொன்னாபரண அதிகார சபையினால் நடைபெறும் ஒரு ஏலத்தில் விற்கப்பட்ட மாணிக்கக் கற்களில் விற்ற விலையிலிருந்து வருமான வரியைக் கழித்தல்**

தேசிய மாணிக்கக்கல் மற்றும் பொன்னாபரண அதிகாரசபை ஏதேனும் ஏலத்தில் விற்கப்பட்ட மாணிக்கக் கற்களில் விற்பனை விலையிலிருந்து வருமான வரியைக் கழித்தல்.

161. (1) ஆயிரத்து தொளாயிரத்துத் தொண்ணூற்றி மூன்றாம் ஆண்டின் 50 ஆம் இலக்க, தேசிய மாணிக்கக்கற்கள் மற்றும் பொன்னாபரண அதிகாரசபையினால் தாபிக்கப் பட்ட மாணிக்கக்கற்கள் மற்றும் பொன்னாபரண அதிகாரசபையினால் அப்படியாக நடாத்தப்பட்ட ஒரு ஏலத்தில் விற்பனை செய்யப்படும் மாணிக் கக்கற்களின் விற்பனை விலையிலிருந்து விற்பனை யாளருக்கு விலையானது செலுத்தவேண்டிய தொகையிலிருந்து விற்பனையாளருக்குச் செலுத் தும் வேளையில் அந்த விற்பனை விலையில் இருந்து நூற்றுக்கு 2.5 சதவீதத்திற்குச் சமமான தொகையொன்றை வருமான வரியாகக் கழிப்பனவு செய்தல் வேண்டும்.

(2) வங்கி மற்றும் நிதி நிறுவனங்களின் கருமங்கள், வருமான வரியைக் கழிக்கும் பொழுது தவறுதல், வங்கி அல்லது நிதி நிறுவனங்களை வரிமதிப்பிடல், மேன்முறையீடு மற்றும் தவறுகைக்கான தண்டனை போன்ற விடயங்கள் தொடர்பான XVI ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகள், "வங்கி மற்றும் நிதி நிறுவனங்கள்" எனும் சொற்களுக்குப் பதிலாக, "தேசிய மாணிக்கக்கற்கள் மற்றும் பொன்னாபரண அதிகாரசபை" என்றும் மற்றும் "வட்டி" எனும் சொற்களுக்குப் பதிலாக, "மாணிக்கக்கல் விற்பனையினால் விற்பனை விலை" எனும் சொற்கள் அந்த அத்தியாயத்தில் பதிலீடு செய்யப்பட்டாற் போன்று ஏற்றமாற்றங்களுடன், ஏதேனும் மாணிக்கக்கல் விற்பனை விலையிலிருந்து வருமானவரி கழிக்கப்படும் சந்தர்ப்பங்களில் விற்பனை செய்யும்பொழுது மாணிக்கக்கற்கள் மற்றும் பொன்னாபரண அதிகாரசபையின் கருமங்கள் வருமானவரியைக் கழித்துக்கொள்வதை தவறுதல் தேசிய மாணிக்கக்கல் மற்றும் பொன்னாபரண அதிகாரசபை மீது வரிமதிப்பு செய்தல், மேம்முறையீடு மற்றும் தவறுதல் தொடர்பான தண்டனை போன்ற விடயங்களுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 162 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**47.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 162 ஆம் பிரிவின் "அந்த உதவு தொகையின் நூற்றுக்கு பத்துக்கு சமமான தொகை" என திருத்தப்படுகிறது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 163 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**48.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 163 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது :-

(1) அந்தப் பிரிவின் 1 ஆம் உட்பிரிவில், "இதற்குப் பின்னர் வரும் நவெம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு பின்பு" எனும் சொற்களுக்குப் பதிலாக, "இதற்குப் பின்னர் வரும் செத்தெம்பர் மாதம் 15 ஆம் திகதிக்குப் பின்பு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் மற்றும்

(2) அந்தப் பிரிவின் 8 ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பிட்டுள்ள, "மோசடி, வழிதவறுதல் வேண்டுமென்றே தவறு இழைக்கப்படவில்லை என்று சத்தியப் பிரமாணம் செய்திருந்தால்'' என்ற சொற்களை பதலீடுசெய்வதின் மூலம்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 164 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**49.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 164 ஆம் பிரிவு, "மதிப்பிடும் அறிவித்தல் மதிப்பீடு செய்யப்படட ஒவ்வொரு நபருக்கும்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "மதிப்பிடும் அறிவித்தல் மதிப்பீடு செய்யப்பட்ட ஒவ்வொரு நபருக்கும் மற்றும் ஒவ்வொரு பங்காளருக்கும்" என்ற சொற்களை பதிலீடு செய்வதினால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 208 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**50.** 2007 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 208 ஆம் பிரிவு அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவின், "உள்நாட்டு இறைவரி வரி மதிப்பீட்டாளர் ஒருவரினால் ஏதேனும் அதிகாரங்கள், கருமங்கள், பொறுப்புகள் போன்றவற்றை செயற்படுத்துதல் அல்லது நிறைவேற்றுதல் செய்யக்கூடாது'' என்ற சொற்கள் மற்றும் இலக்கங்களுக்குப் பதிலாக, "உள்நாட்டு இறைவரி வரி மதிப்பீட்டாளர் ஒருவரினால் –

(அ) 163 ஆம் பிரிவின் கீழான அமைவான நடவடிக்கைகள் ;

(ஆ) 165 ஆம் பிரிவின் 7 ஆம் உபபிரிவுக்கு அமைவாக மதிப்பீட்டிற்கு ஏதேனும் திருத்தம் அல்லது உடன்பாட்டுக்கு வருதல் அல்லது,

ஆணையாளர் அல்லது பிரதி ஆணையாளரின் எழுத்து மூல சம்மதம் இல்லாமல் செய்யக்கூடாது என்ற சொற்கள் மற்றும் இலக்கங்களை பதிலீடு செய்வதனால்.

*பிராதன சட்டவாக்கத்தின் 217 ஆம் பிரிவுக்கான திருத்தம்.*

**51.** 2007 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட பிரதான சட்டவாக்கத்தின் 217 ஆம் பிரிவு, "ஆணையாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட'' எனும் சொற்றொடரின் வரைவிலக்கணத்தினால், "சேமலாபம் அல்லது ஓய்வூதிய நிதியம் தொடர்பாகப் பயன்படுத்தப்படும்போது" எனும் சொற்றொடரைப் பதிலீடு செய்தல் என்பதால் மேலும் திருத்தப்படுகின்றது.

**52.** பிரதான சட்டவாக்கததின் மூன்றாவது உப அட்டவணை பின்வருமாறு திருத்தப்படுகின்றது -

*பிரதான சட்டவாக்கத்தின் மூன்றாவது அட்டவணை திருத்தப்படல்.*

(1) அந்த உப அட்டவணையின் 7 ஆம் இலக்க, விடயத் துக்குப் பதிலாக பின்வரும் விடயம் பதிலீடு செய்யப் படுவதனால்,

"7. 1975 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கச் சட்டம் பதிவு செய்யப்பட்டதாகக் கருதப்படும் ஏதேனும் சங்கமொன்று 2008, மாச்சு 31 இல் முடிவடையும் மதிப்பீட்டு ஆண்டின் அல்லது அதற்கு முன்னர் அல்லது 2013, ஏப்பிறல் மாதம் ஆரம்ப மாகும் மதிப்பீட்டு ஆண்டில் அல்லது அதன் பின்ன ரான மதிப்பீட்டு ஆண்டொன்றுக்கான வரி அறவிடும் வருமானத்தின், நூற்றுக்கு ஐந்து" மற்றும்

**53.** பிரதான சட்டவாக்கத்தின் ஐந்தாம் உப அட்டவணையின் 15 ஆம் விடயம் பின்வருமாறு திருத்தப்படுகின்றது. "46 ஆம் பிரிவுக்கு அமைவாக வரி அறவிடக்கூடிய இலாபம் மற்றும் இலங்கைக்கு வெளியே இருந்து கிடைத்துள்ள ஏதேனும் இலாபங்களுக்கு" எனும் சொற்கள் மற்றும் இலக்கங்களுக்குப் பதிலாக "46 ஆம் பிரிவுக்கு அமைவாக 2008 ஏப்பிறல் 01 ஆம் திகதிக்கு முன்னர் கிடைத்த வரி அறவிடக்கூடிய இலாபம் மற்றும் இலங்கைக்கு வெளியே இருந்து கிடைத்த ஏனைய இலாபங்கள்" எனும் சொற்கள் மற்றும் இலக்கங்கள் சேர்க்கப்படுவதன்மூலம்.

*பிராதன சட்டவாக்கத்தின் 5 ஆம் உப அட்டவணை திருத்தப்படல்.*

**54.** இச்சட்டத்தின் 21(1) பிரிவுக்கு மற்றும் 46 ஆம் பிரிவுக்கு அமைவாக முறையே 34 ஆம் பிரிவின் 2 ஆம் உப பிரிவு (ஆ) பந்திக்கு செய்யப்பட்ட திருத்தம் மற்றும் முதன்மைச் சட்டவாக்கத்திற்கு புதிதாக உட்புகுத்தப்பட்ட XXஅ பிரிவு சட்டத்தின் சகல காரியங்களுக்கும் 2008 சனவரி 1 ஆம் திகதியில் இருந்து அதிகாரத்திலிருக்கவேண்டுமென்று கருத்தில்கொள்ள வேண்டும்.

*எதிர்காலத்திற்கு வழக்கத்துக்கு வரும்.*

**55.** இச்சட்டத்தின் சிங்களம் மற்றும் தமிழ்மொழி உரை களுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*